» தொகுதி 1, இதழ் 8
» அக்டோபர் 16-31, 2020
இலவச விநியோகத்திற்காக

# நியூ இந்தியா சமாச்சார்

NEW INDIA SAMACHAR

»Volume 1, Issue 8
»October 16-31, 2020



# சாமானிய மக்களுக்கும் சிறகுகள்

"ஹவாய் ஜகாஸ்" என்ற பிரதமரின் கனவை, ஹவாய் செருப்பு அணியும் மக்களுக்கும், உடான் நனவாக்குகிறது



# “நமது விவசாயிகளும் கிராமங்களுமே சுயசார்பு இந்தியாவின் அடிப்படை”

**பிரதமர் தமது சமீபத்திய மன் கி பாத் உரையில் கதை சொல்வது குறித்தும், வேளாண்துறைச் சீர்திருத்தங்கள் பற்றியும் கூறியதோடு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், சீர்திருத்தவாதிகளுக்கும் புகழஞ்சலி செலுத்தினார்.**

**கதை சொல்லுதல்:** கொரோனா நெருக்கடி காலம் குடும்ப உறுப்பினர்கள் இடையேயான பிணைப்பை மேலும் நெருக்கமாக்கியுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலும் கதை சொல்லும் ஒரு வயதானவர் இருப்பார். அவர் சொல்லும் கதைகள் மூலம் அந்த வீடுகளில் புதிய சக்தி பரவும். உற்சாகம் பிறக்கும். கதை சொல்லுதல் ஒரு சிறந்த கலை வடிவமாகும். கதைகளின் வரலாறு மனித நாகரிகத்தைப் போலவே மிகவும் பழமை வாய்ந்தது. எங்கெல்லாம் ஆன்மா உள்ளதோ அங்கெல்லாம் ஒரு கதை இருக்கும்.

**வெளிநாடுகளில் இந்தியா:** மாலியில் கீதா எனும் இடத்தில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் சீது டெம்பெல் அவர்களுக்கு மற்றொரு அடையாளமும் உண்டு. மக்கள் அவரை ஹிந்துஸ்தானி பாபு என்றழைக்கிறார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர் “பாலிவுட் பாடல்கள் பற்றிய இந்திய அலைவரிசை” என்ற தலைப்பில் ஒரு மணி நேர வானொலி நிகழ்ச்சி ஒன்றை வழங்குகிறார்.

**வேளாண்மை:** சிரமமான கொரோனா காலகட்டத்தில் நமது வேளாண் துறையும், உழவர்களும் மிகுந்த உறுதியை வெளியிட்டிருக்கிறார்கள். சுயசார்பு இந்தியாவின் அடிப்படை வேளாண்துறையும், நமது விவசாயிகளும், நமது கிராமங்களுமேயாகும்.

**மகாராஷ்டிரா:** மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மகாராஷ்டிராவில் பழங்கள் காய்கறிகள் ஆகியவை வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுவின் (ஏ பி எம் சி) பார்வைக்கு அப்பாற்பட்டது என்று அரசு அறிவித்தது. இதனால் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை விளைவிப்பவர்கள் பலரது நிலைமை மேம்பட்டுள்ளது. ஸ்ரீ சுவாமி சமர்த் ஃபார்ம் ப்ரொட்யூசர் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனம், பண்ணை உற்பத்தியாளர்களுக்கான நிறுவனமாகும். இந்த நிறுவனம் புனேயிலும், மும்பையிலும் வாரச் சந்தைகளில் விவசாயிகள் விளைபொருள்களை விற்பதற்கு உதவுகிறது. இந்தச் சந்தைகளில், ஏறத்தாழ 70 கிராமங்களிலிருந்து சுமார் 4500 விவசாயிகளின் விளை பொருள்கள், எந்தவித இடைத்தரகர்களும் இல்லாமல் விற்கப்படுகின்றன.

**தமிழ்நாடு:** மற்றொரு உதாரணம் தமிழ்நாட்டில் உள்ள வாழைப்பழங்களை விளைவிக்கும் விவசாயிகள் ஒன்றிணைந்து வாழைப்பழ வேளாண் விளைபொருள் நிறுவனம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இந்த நிறுவனம் நூற்றுக்கணக்கான மெட்ரிக் டன் எடை கொண்ட காய்கறிகள், பழங்கள், வாழைப் பழங்கள் ஆகியவற்றைப் பொதுமுடக்கக் காலத்தின் போது சுற்றுப்பகுதிகளில் உள்ள கிராமங்களிலிருந்து கொள்முதல் செய்து, சென்னையில் காய்கறி கோம்போ கிட்டுகளாக விற்பனை செய்தது.

**உத்தரப்பிரதேசம்:** இதுபோன்ற விவசாயிகள் குழு ஒன்று லக்னோவில் இராடா என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. பொதுமுடக்கக் காலத்தின் போது இராடா, பழங்களையும் காய்கறிகளையும் அவற்றை விளைவிப்பவர்களிடமிருந்து நேரடியாக வாங்கி, சந்தையில் விற்பனை செய்தது.

**குஜராத்:** குஜராத்தின் பனஸ்கந்தா என்னுமிடத்தில் ராம்புரா என்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி, இஸ்மாயில் பாய். இவர் சொட்டுநீர்ப் பாசன வசதி புதிய தொழில்நுட்ப உத்திகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, உருளைக்கிழங்கு பயிரிட்டார். இப்போது அவை அவருக்கான அடையாளமாகவே மாறிவிட்டன.

**காந்தியடிகளையும், லால் பகதூர் சாஸ்திரி அவர்களையும் நினைவு கூர்தல்:** அக்டோபர் 2 புனிதமான ஒரு நாளாகும். அன்னை இந்தியாவின் மிகச் சிறப்பான இரண்டு புதல்வர்களை - காந்தியடிகள், லால் பகதூர் சாஸ்திரி - ஆகியோரை நாம் இன்றைய தினம் நினைவு கூர்கிறோம். மகாத்மா காந்தியின் பொருளாதாரச் சிந்தனைகளைப் புரிந்து கொள்ளவோ, அவற்றை நடைமுறைப்படுத்தவோ நம்மால் முடியும் என்றால், சுயசார்பு இந்தியா திட்டம் தேவைப்பட்டிருக்காது.

**ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுக்கும் நானாஜிக்கும் புகழஞ்சலி:** அக்டோபர் 11 தினத்தில் நாம் பாரத ரத்னா லோக் நாயக் ஜெயபிரகாஷ் நாராயண் அவர்களையும், பாரதரத்னா நானாஜி தேஷ்முக் அவர்களையும் அவர்களது பிறந்த ஆண்டில் நினைவு கூர்கிறோம்.

**ராஜமாதாவின் பிறந்த நூற்றாண்டு விழா:** ராஜமாதா விஜயராஜ் சிந்தியா அவர்கள் தம்முடைய வாழ்க்கையை மக்களின் சேவைக்காக அர்ப்பணித்துக் கொண்டார். அக்டோபர் 12 அன்று அவரது பிறந்த நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் நிறைவடைகின்றன.

**பகத்சிங்:** செப்டம்பர் 28 அன்று ஷாஹித் வீர் பகத்சிங் அவர்களின் பிறந்த ஆண்டை நாம் கொண்டாடுகிறோம். அவர் எந்த அளவிற்கு விடுதலைப் போராட்ட வீரராக இருந்தாரோ, அதே அளவிற்கு அறிவாளியாகவும், சிந்தனைவாதியாகவும் இருந்தார்.

**அதிரடித் தாக்குதல்:** நான்காண்டுகளுக்கு முன் இதே காலத்தில் தான் நம்முடைய இராணுவ வீரர்களின் வீரத்தையும், துணிவையும், தைரியத்தையும், நம் வீரர்களின் தாக்குதல் நடவடிக்கைகளின் போது உலகம் கண்டது. இராணுவ வீரர்களுக்கு ஒரே ஒரு குறிக்கோள் மட்டுமே இருந்தது: அன்னை இந்தியாவின் கௌரவத்தையும், புகழையும் பாதுகாப்பது என்பது மட்டுமே. ■

*மன் கி பாத் உரையைக் கேட்க, இந்த க்யூ ஆர் குறியீடை ஸ்கேன் செய்யவும்*

# நியூ இந்தியா சமாச்சார்

» தொகுதி 1 இதழ் 8 » அக்டோபர் 16 - 31 2020

**Editor**
Kuldeep Singh Dhatwalia,
PDG, PIB, New Delhi

**Consulting Editor**
Vinod Kumar

**Assistant Consulting Editor**
Sharat Kumar Sharma

**Designer**
Ravindra Kumar Sharma

**Published & Printed by**
Satyendra Prakash,
DG, BOC
on behalf of Bureau of
Outreach and
Communication

**Printed at**
Infinity Advertising services Pvt.Ltd.
FBD-One Corporate Park, 10th floor,
New Delhi-Faridabad border, NH-1,
Faridabad-121003

**Published from**
Bureau of Outreach and
Communication, 2nd Floor, Soochna
Bhawan,
New Delhi -110003

**NEW INDIA SAMACHAR**

RNI No. : **DELTAM/2020/78809**

response-nis@pib.gov.in

## பொருளடக்கம்

» 1 ஆசிரியர் பக்கம் »Pg. 02

» 2 புகழஞ்சலி : சர்தார் படேலை நினைவு கூர்வோம் »Pg. 03

» 3 செய்திச் சுருக்கம் »Pg. 04-05

» 4 அம்ருத் திட்டம்: வருங்காலத்திற்கான நகரங்கள் »Pg. 06-07

» 5 கட்டமைப்பு: சாலைகளும், பாலங்களும் »Pg. 08-9

» 6 முதன்மைத் திட்டம்: திறன் வாய்ந்த இந்தியா »Pg. 10-12

» 7 இணைப்பு: கிராமப்புற இணையதள சேவை »Pg. 13

» 8 சிறப்பு அறிக்கை: கச்சிதமான இந்தியா உடல்நலமுள்ள இந்தியா »Pg. 14-16

» 9 நாடாளுமன்றக் கூட்டத்தொடர் »Pg. 17

» 10 அட்டைப்படக் கட்டுரை: உடான் திட்டம் »Pg. 18-22

» 11 அதிகாரம்: பென்சில் கிராமம் »Pg. 23

» 12 திட்டம்: டி டி இலவச டிஷ் »Pg. 24-26

» 13 கொரோனாவிற்கு எதிரான போர் »Pg. 27

» 14 யு என் ஜி ஏ: ஐநாவில் சீர்திருத்தம் »Pg. 28-29

» 15 பத்தி: பிவி சிந்து »Pg. 30

» 16 சுற்றுச்சூழல்: சுயசார்பு கிராமங்கள் »Pg. 31

» 17 நேர்மறை அணுகுமுறை: மாறிவரும் இந்தியா »Pg. 32

# ஆசிரியர் பக்கம்

அன்பு வணக்கம்

நியூ இந்தியா சமாச்சாரின் புதிய இதழுக்காகக் காத்துக் கொண்டு இருந்திருப்பீர்கள். சர்தார் படேல் அவர்களுக்கு அவரது 145ஆவது பிறந்த ஆண்டையொட்டி, அக்டோபர் 31ஆம் நாளன்று நாடு அவருக்கு வீரவணக்கம் செலுத்துகிறது. அக்டோபர் 31 ராஷ்ட்ரிய ஏக்தா திவஸ் - தேச ஒருமைப்பாடு நாளாகக் கொண்டாடப்படுகிறது. சர்தார் படேல் தேசத்தை அரசியல் ரீதியாக ஒருமைப்படுத்தினார் என்றால், பிரதமர் நரேந்திர மோடி, ஒருங்கிணைந்த இந்தியாவை அதன் உண்மையான உணர்வுடன் ஒருங்கிணைத்து 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற குறிக்கோளை நோக்கி நாட்டை எடுத்துச்செல்வதில் தலைமை வகிக்கிறார். கடந்த ஆறு ஆண்டுகளில் நாட்டின் முன்னேற்றம் பல்வேறு புதிய பரிமாணங்களில் வெளிப்பட்டு வருகிறது. பல்வேறு சர்வதேச தளங்களிலும் கட்டாயமாக இந்தியா இடம்பெற்றிருப்பதிலிருந்தே இதை உணர்ந்து கொள்ளலாம்.

கிராமங்களும், கிராமப்புற ஏழை மக்களும் விவசாயிகளுமே அரசின் முன்னுரிமைப் பட்டியலில் மிக அதிகமான முக்கியத்துவம் பெற்றுள்ளனர். நகர்ப்புற ஏழை மக்களுக்கும் அடிப்படை வசதிகள் கிடைப்பதை அரசு உறுதி செய்துள்ளது.

வெகு நீண்ட காலமாக, விமானப்பயணம் என்பது, இந்தியாவின் சராசரி மனிதனின் பூர்த்தி செய்யப்படாத ஆசையாகவே இருந்து வந்துள்ளது. ஹவாய் செருப்பு அணிந்து செல்லும் மனிதனும், ஹவாய் ஜஹாசில் பறந்து செல்ல முடியும் என்று அரசின் முயற்சியான உடான் நிரூபித்துள்ளது. இதுபோன்ற அரசின் முயற்சிகள் பலவற்றைக் குறித்து இந்த இதழ் பேசுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் 75ஆவது ஆண்டு நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி ஐநாவில் வெகுவிரைவில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். ஐநாவில் முடிவெடுக்கும் கட்டமைப்புக்கு வெளியே எத்தனைக் காலங்கள் தான் இந்தியா வைத்திருக்கப்படும்? என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார். ஐ நா விற்கு அவர் விடுத்துள்ள செய்தியும் இந்த இதழில் உள்ளது.

இந்த இதழ் அரசின் ஊதுகுழல் / குரல் அல்ல; இந்த இதழ் சரியான தகவல்களை அளிக்கும் ஒரு தளமாகும்.

இந்த இதழ் கிராமப் பஞ்சாயத்துகள், மாவட்ட பரிஷத்கள், பஞ்சாயத்து சமிதிகள், நூலகங்கள், எம்எல்ஏக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் ஆகிய அனைவருக்கும் கிடைக்கும்.

இந்த இதழின் இணைய வடிவம் ஐந்து கோடிக்கும் அதிகமான மக்களுக்குக் கிடைக்கிறது.

உங்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அறிந்துகொள்ள மிகவும் ஆவலாக உள்ளோம்.

அவற்றை நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்

முகவரி: பியூரோ ஆஃப் அவுட்ரீச் அண்ட் கம்யூனிகேஷன் இரண்டாம் தளம் சூச்னா பவன், புது தில்லி - 110003.

மின்னஞ்சல்: response-nis@pib.gov.in

தங்கள் நல்லாசியுடன்

K S Dhatwalia

கே எஸ் தத்வாலியா

# பல இயக்கங்களின் தலைவர்

*நாட்டின் முடியாட்சி அரசுகளை ஒருங்கிணைத்து அதன் மூலமாக மக்களாட்சி என்ற மகத்தான கம்பீர மாளிகையை உருவாக்கியவர் சர்தார் படேல்.*



நாட்டின் முதலாவது உள்துறை அமைச்சரான சர்தார் படேல் அவர்களின் கனவு 31 அக்டோபர் 2019 அன்று நனவாகியது. அன்று தான் ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்ட சட்டப்பிரிவு 370 மற்றும் 35கி நாடாளுமன்றத்தால் நீக்கப்பட்டது. நாட்டின் ஒட்டுமொத்த தேசிய நீரோட்டத்தில் ஜம்மு காஷ்மீரையும் முறையாக இணைப்பது என்ற முடிவை அறிவிக்க அக்டோபர் 31ஆம் நாள் - சர்தார் பட்டேலின் பிறந்தநாள் - தேர்ந்தெடுக்கப்பட்டது வெறும் தற்செயல் அல்ல. சர்தார் படேல் பிறந்த நாளை, தேசிய ஒருமைப்பாட்டு நாளாக, இந்தியா கொண்டாடுகிறது.

ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கிய சர்தார் படேலுக்கு, ஜம்மு காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பது என்பதைக் காட்டிலும் மிக ஏற்ற வகையிலான புகழஞ்சலி இருக்க முடியாது. 31 அக்டோபர் 2019 அன்று பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது: “காஷ்மீர் பிரச்னை தம்மிடம் இருந்திருந்தால், அதற்குத் தீர்வு காண்பதற்கு இவ்வளவு காலம் பிடித்திருக்காது என்று சர்தார் பட்டேல் ஒரு முறை கூறியிருந்தார். ... இது சர்தார் சாகிபினுடைய நிறைவடையாத ஒரு கனவாக இருந்தது”.

சட்டப்பேரவையில் தனிப்பட்டத் தேர்வாளர்களை நீக்குவதிலும், அதிகாரப் பரிமாற்றத்தின் போது அரசு அமைப்பதில் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் அவர் ஆற்றிய பங்கு மகத்தானது. கேடாவிலும், பர்தோலியிலும், மக்களைத் திரட்டிய விதம்; அகமதாபாத் நகராட்சியிலும், அதன் பிறகு மத்திய அரசிலும் அரசாளுமை செய்த கலை; அரசியல் சாசனத்தை வகுப்பதற்கான குழுவின் தலைவராக பி. ஆர். அம்பேத்கரை நியமித்ததில் அவரது பங்கு ஆகியவை மிகவும் குறிப்பிடத்தக்கவை. சத்தியாகிரகப் போராட்டத்தின் வெற்றிக்குப் பிறகு, பர்தோலியில் இருந்த பெண்கள் அவருக்கு ‘சர்தார்’ என்ற பட்டப் பெயர் அளித்தார்கள்.

சிறுபான்மையினர், பழங்குடியினர், உட்படுத்தப்படாத பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அடிப்படை உரிமைகள், அரசியல் சாசனம் ஆகியவற்றுக்கான குழுக்களின் தலைவராக, சர்தார் படேல் முக்கிய பங்காற்றினார். இந்தியக் குடிமைப் பணியில் உள்ளவர்கள் அரசியல் தலையீடு இன்றிச் செயல்படவும், அவர்களுக்கான உரிமைகளும், நிலைமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது குறித்து அரசியல் சாசனத்தின் இரண்டு சட்டங்கள் நிறைவேற அவரது தலையீடு மிக முக்கியமான காரணியாக இருந்தது.

**பிறப்பு : 31 அக்டோபர் 1875**

**இறப்பு : 15 டிசம்பர் 1950**

சர்தார் படேலின் தலைமையையும், அரசியல் அறிவுக் கூர்மையையும் பாராட்டிய காந்தியடிகள் கூறியதாவது: “ஒரு தலைவர் தனது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையின் மூலம் ஒரு தலைவரின் திறனை அனுமானித்து விடலாம். முதன் முதலில் நான் வல்லபபாயை சந்தித்த போது, இறுக்கமாக இருக்கும் இந்த நபர் யார் என்றும், நான் விரும்பியதை இவரால் சரிவரச் செய்ய முடியுமா என்றும் யோசித்தேன் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், மேலும் மேலும் அவர் குறித்து அறிந்து கொண்ட போது, அவரது உதவியை நான் பெற்றே தீர வேண்டும் என்பதை மேலும் அதிகமாக உணர்ந்தேன்.... அவருடைய உதவி இல்லாவிட்டால், இந்த இயக்கம் (கேடா சத்தியாகிரகம்), இந்த அளவிற்கு வெற்றிகரமாக நடைபெற்றிருக்க முடியாது என்பதை நான் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்” . ■

## எட்டு இந்தியக் கடற்கரைகளுக்கு 'நீலக்கொடி' சுற்றுச்சூழல் தகுதி முத்திரை



தூய்மை இந்தியா திட்டம், இந்தியாவைப் பற்றிய எண்ணங்களை மாற்றியுள்ளது. இந்த புதிய பிம்பத்திற்கு கட்டியம் கூறுவது போல இந்தியாவின் எட்டு கடற்கரைகளுக்கு 'நீலக்கொடி' சுற்றுச்சூழல் முத்திரை வழங்கப்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டு முதல் 100 நாடுகளில் சர்வதேசக் கடற்கரைத் தூய்மைப்படுத்தும் நாளை ஒட்டி இந்த முத்திரை அளிக்கப்பட்டுள்ளது. இந்தியக் கடற்கரைகளுக்கு இந்த முத்திரை அளிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். குஜராத்தில் உள்ள சிவராஜ்பூர், டாமன் டையூ வில் உள்ள கோகோலா, கர்நாடகாவில் உள்ள, பாடுபிட்ரி, கேரளாவில் உள்ளகாசர்கோட், கப்பட், ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள ருஷிகொண்டா, ஒடிசாவில் உள்ள தங்கக்கடற்கரை, அந்தமான் நிக்கோபாரில் உள்ள ராதா நகர் ஆகியவற்றுக்கு இந்த முத்திரை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள பல்வேறு கடற்கரைகளையும் தூய்மைப்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் கூறினார். கடலோரப் பகுதிகளின் சுற்றுச்சூழலுக்குச் சான்றாக தூய்மையான கடற்கரைகள் உள்ளன. ■




## ஷெல் நிறுவனங்கள் எனப்படும் செயல்பாடுகளற்ற நிறுவனங்கள் மீது நடவடிக்கை

கடந்த மூன்றாண்டு காலத்தில் மூன்று லட்சத்து 82 ஆயிரத்து 581 ஷெல் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு, பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாக நிதி அறிக்கைகளை தாக்கல் செய்யாத நிறுவனங்கள் பற்றிய அறிக்கையின் அடிப்படையில் இவை அடையாளம் காணப்பட்டன. நிறுவனச் சட்டம் 2013 பிரிவு 248, நிறுவனங்கள் பதிவுப் பட்டியலிலிருந்து நிறுவனங்களின் பெயர்களை அகற்றுவதற்கான நிறுவன விதிமுறைகள் 2016 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் பிறகு இந்த நிறுவனங்கள் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டன. எந்தவித வணிகச் செயல்பாடுகளும் இல்லாமல், எந்தவிதமான சொத்துக்களும் இல்லாமல் இயக்கங்கள் எதுவுமற்ற நிலையில் இருக்கும் ஒரு நிறுவனமே ஷெல் நிறுவனம் எனப்படும். வரிஏய்ப்பு, கருப்புப் பணத்தைக் கணக்கில் வரும் பணமாக மாற்றுவது, உரிமையாளர் விவரங்களை மறைப்பது, பினாமி சொத்துகள் போன்றவற்றுக்காக இது போன்ற நிறுவனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ■

## எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரம் நீலச்சுடர் புரட்சிக்கு வழிவகுக்கும்



“அனைவரின் முன்னேற்றத்திற்காகவும், அனைவருடனும்” என்ற தொலைநோக்குப் பார்வையை அடைவதற்காக, எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரம் கொண்டதாக இந்தியாவை உருவாக்கி, அதன்மூலம் நீலச் சுடர்ப் புரட்சியைக் கொண்டு வருகிறது அரசு. இந்த திசையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் அரசு, 28 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்கியுள்ளது. ஐந்து கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு பெட்ரோலிய இயற்கை எரிவாயு இணைப்புகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 947 என்ற எண்ணிக்கையில் இருந்த அழுத்த நிலை இயற்கை எரிவாயு நிலையங்கள் கடந்த ஆறு ஆண்டுகளில் 2300 ஆக அதிகரித்துள்ளன. நகர எரிவாயு விநியோகக் (City Gas Distribution - CGD) கட்டமைப்பு மூலம் நாட்டில் 400 மாவட்டங்களுக்கு எரிவாயு விநியோகிக்கப்படுகிறது. சி ஜி டி விநியோகத்திற்கான 11வது சுற்று ஏலம் பெட்ரோலியம் இயற்கை எரிவாயுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் (Petroleum and Natural Gas Regulatory Board - PNGRB) விரைவில் நடத்தப்பட உள்ளது. இந்த ஏலத்திற்குப் பிறகு மேலும் 50 முதல் 100 மாவட்டங்களுக்குத் தூய்மையான எரிபொருள் கிடைக்கத் துவங்கும். இதற்காக 17 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்குக் குழாய் இணைப்பு பதிக்கப்பட்டு வருவதாக மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறினார் ■

## தேசியத் தலைநகர்ப் பகுதியில் (National Capital Region - NCR) காற்று மாசைக் கட்டுப்படுத்துவதற்காக, பிரதமர் அலுவலகத் தலைமையிலான குழு நடவடிக்கை

குளிர் காலங்களிலும் அறுவடைக் காலத்தின் போதும், தேசியத் தலைநகர் மண்டலப் (என்சிஆர்) பகுதியில், காற்று மாசு தீவிரமாக அதிகரிப்பதைத் தவிர்ப்பதற்காக, அங்கு காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உயர் நிலையிலான பணிக்குழுக் கூட்டத்திற்கு பிரதமரின் முதன்மைச் செயலர் டாக்டர். பி. கே. மிஸ்ரா தலைமை தாங்கினார். இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கான ஆயத்தங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கசடு அடிப்படையிலான மின்சாரம்/எரிபொருள் ஆலைகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்கப்பட வேண்டும் என்ற பட்டியலில் இந்திய ரிசர்வ் வங்கி ஆணையிட்டுள்ளதைக் கவனத்தில் கொண்ட இந்தக் குழு மத்திய, மாநில அரசுகள் இது போன்ற ஆலைகளை விரைவில் அமைப்பதற்கு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் செயல் திட்டங்களை இணைந்து தயாரிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. காற்று மாசுபாட்டுக்கான முக்கியமான காரணங்கள் குறித்தும், காற்று மாசுபாட்டைத் தடுப்பதற்கு மாநில அரசுகளும், பல்வேறு அமைச்சகங்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும், அவற்றின் முன்னேற்றம் குறித்தும் பணிக்குழு பரிசீலித்தது. அறுவடை முடிந்த பிறகு பயிர்களின் அடித்தட்டைகளை எரிக்கும் நிகழ்வுகள் கடந்த இரண்டாண்டுகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமாகக் குறைந்துள்ளது என்பதும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நல்ல காற்றுத் தரக் குறியீடு (Air Quality Index - AQI) நாள்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்ற விவரமும் குறித்துக் கொள்ளப்பட்டது. பயிர்களின் மிச்சங்களை எரிப்பதைக் கட்டுப்படுத்த பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம்; ஆகிய மாநிலங்கள் செயல்படுத்த உள்ள திட்டங்கள் குறித்தும், முயற்சிகள் குறித்தும் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது. இவற்றைச் செயல்படுத்துவதற்கு தேவையான உபகரணங்கள் குறித்தும் பயிர் மிச்சங்கள் இருக்கும் அதே இடத்திலேயே மேலாண்மை முறையைக் கையாள்வது குறித்தும், அவற்றை அகற்றுவதற்கான இயந்திரங்கள், கருவிகள் ஆகியவை உள்ளனவா என்பது குறித்தும், கள அளவில் இந்தத் திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்பட உள்ளன என்பது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டன. ■



## உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஒரு மாவட்டம் ஒரு பொருள் திட்டம்



ஒரு மாவட்டம் ஒரு பொருள் (One District One Product - ODOP) திட்டம் ஒரு மாவட்டத்தின் உண்மையான திறமையைளீ கண்டறிந்து முன்னெடுத்துச் செல்லவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும், கிராமப்புறங்களில் தொழில்முனைவோரை அதிகரிக்கவும், சுயசார்பு இந்தியா என்ற குறிக்கோளை அடையவும் உதவும் வகையில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. 'ஒரு மாவட்டம் ஒரு பொருள்' திட்ட முயற்சிகளைச் செயல்படுத்துவதற்காக மத்திய மாநில அரசு முகமைகளுடன், மத்திய வர்த்தகத்துறை வெளிநாட்டு வர்த்தகத் தலைமை இயக்குநரகம் மூலமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், அதன் பொருள்களையும், அவற்றின் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளையும் கண்டறிவது, இந்தப் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் உள்ள சிக்கல்களைக் கண்டறிந்து தீர்வு காண்பது, உள்ளூர் ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளிப்பது, உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி செய்வதை அதிகரிப்பதற்கான ஊக்கமளிப்பது ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்தையும், ஒரு ஏற்றுமதித் தளமாக மாற்றுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தியாவிற்கு வெளியே இந்தப் பொருள்களை வாங்கும் ஆர்வம் கொண்ட வாடிக்கையாளர்களைக் கண்டறிவது, தொழில்துறை சேவைத்துறை ஆகியவற்றை மேம்படுத்துவது, வேலைவாய்ப்பை உருவாக்குவது ஆகியவையும் இத்திட்டத்தில் அடங்கும். ■

## மின் போக்குவரத்துக்கு அதிக உந்துதல்

நிலத்தடி எரிபொருள் ஆதாரங்கள் மீது அதிகம் சார்ந்திருப்பதைக் குறைக்கவும், வாகனங்களினால் வெளிவரும் புகையைக் குறைப்பதற்காகவும் மகாராஷ்டிரா, கோவா, குஜராத், சண்டிகர் ஆகிய மாநிலங்களுக்கு 670 மின்சாரப் பேருந்துகளை வழங்கவும், மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு, கேரளா, குஜராத் போர்ட் பிளேயர் ஆகிய இடங்களில் 241 மின் பொருத்தி மையங்களை அமைக்கவும் ஃபேம் இந்தியா (FAME India Scheme) திட்டத்தில் இரண்டாம் கட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த முதல் கட்டத்தில், 359 கோடி ரூபாய் செலவில் டிமான்ட்/ கோரிக்கை ஊக்கத்தொகை மூலமாக, இரண்டு லட்சத்து 80 ஆயிரத்து 987 ஹைப்ரிட் மற்றும் மின்சார வாகனங்களுக்கு அரசு உதவி அளித்தது. கனரகத் தொழில்கள் துறை (Department of Heavy Industry -DHI) 280 கோடி ரூபாய் செலவில் பல்வேறு நகரங்களுக்கு 425 மின்சார மற்றும் ஹைப்ரிட் பேருந்துகள் வாங்க அனுமதி அளித்தது. பெங்களூரு, சண்டிகர், ஜெய்ப்பூர்,

தேசியத் தலைநகரப் பகுதி ஆகிய பகுதிகளில் முதல் கட்டத்தில் சுமார் 43 கோடி ரூபாய் செலவில் 520 மின் பொருத்தி நிலையங்கள் அமைக்க கனரகத் தொழில்கள் துறை அனுமதியளித்தது. ■





# நகரங்களுக்கு வாழ்வளிக்கும் அம்ருத்

*நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள 500க்கும் மேற்பட்ட நகரங்களை உள்ளடக்கியது இத்திட்டம் நகரங்களில் வசிப்பவர்களின் வாழ்க்கை வசதியாக இருக்கவேண்டும் என்ற திட்டத்தின் நோக்கம் நிறைவேறியது.*

அரசுக்கு ஒவ்வொரு சவாலுடனும் கூடவே ஒரு வாய்ப்பும் வந்த வண்ணம் உள்ளது. இந்தியா வெகு விரைவாக நகரமயமாகி வருவதையடுத்து, குடிநீர் வழங்குதல், கழிவு நீரகற்றுதல், சாக்கடை அமைப்பு, போக்குவரத்து மற்றும் பிற பிரச்சினைகள் பெரும் சவாலாக மாறியுள்ளன. ஒவ்வொரு பிரச்சினையையும் நீண்டகாலச் செயல் திட்டத்துடன் அணுக வேண்டும் என்ற அணுகுமுறை கொண்ட பிரதமர் நரேந்திர மோடி 25 ஜூன் 2015 இல் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள 500 நகரங்களில், மொத்தமுள்ள நகர்ப்புற மக்கள் தொகையில் சுமார் 60 சதவிகிதம் பேரைச் சென்றடையும் வகையில் புனரமைப்பு, நகர்ப்புறங்களின் தன்மை மாற்றம் ஆகியவற்றுக்கான அடல் திட்டம் (Atal Mission for Rejuvenation and Urban Transformation - AMRUT) இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டம் தற்போது ஐந்தாவது ஆண்டில் உள்ளது. இத்திட்டம் இதுவரை அடைந்த சாதனைகளுக்காக பல்வேறு பாராட்டுகளைப் பெற்றுள்ளது. மத்தியப் பிரதேசத்தில் சேகூரில் அல்லது வதோதராவில், குடிநீர் வழங்கும் திட்டம்; விஜயவாடா அல்லது கொச்சியில் எல்இடி விளக்குகள் பொருத்தும் திட்டம் என எந்தத் திட்டமாயினும் அந்தத் திட்டம் அனைத்தும் அரசின் தொலைநோக்குப் பார்வையின் படி நிஜத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 67 லட்சம் எல்இடி தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 147 கோடி யூனிட் மின்சாரத்தைச் சேமிக்க முடியும் அது மட்டுமல்லாமல் 12 லட்சம் டன் அளவிற்கு கார்பன் வெளியேற்றமும் குறைக்கப்பட்டுள்ளது.

அம்ருத் திட்டத்தின் மிக முக்கியமான ஒரு பகுதியாக விளங்கும் ஜல் ஜீவன் இயக்கத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 2 கோடிக்கும் அதிகமான குடிநீர்க் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. தூய்மையான நீர் ஏழை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பல்வேறு மோசமான நோய்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கிறது. சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு தகுந்த உத்வேகம் அளிக்கும் வகையில், நகரங்களின் இப்போதைய தேவைகளைத் தீர்த்து வைப்பது என்பது மட்டுமல்லாமல், நகரங்களை எதிர்காலத்தின் தேவைகளுக்கு ஆயத்தப்படுத்த வேண்டியதும் மிகவும் முக்கியம் என்று பிரதமர் கூறியுள்ளார். இந்தச் சிந்தனையோடு அம்ருத் இயக்கத்தின் கீழ், நகரங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நகரமயமாவதற்கு பெரிதும் ஆதரவளித்த பாபாசாஹேப்

## சாதனை மைல் கற்கள்

*25 ஜூன் 2020 அன்று இந்த இயக்கத்தின் ஐந்தாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இந்த இயக்கம் அடைய வேண்டிய பலன்களை அடைந்துவிட்டதாக விழா நிகழ்ச்சியில் பேசிய மத்திய வீட்டு வசதி நகர்ப்புற விவகாரங்கள் துறை இணையமைச்சர் ஹர்தீப் சிங் பூரி கூறினார்.*





- நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள 500 நகரங்களில் 79 லட்சம் இல்லங்களுக்கு குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கப்பட்டது. 45 லட்சம் இடங்களுக்கு கழிவுநீர்க் கால்வாய் இணைப்புகள் வழங்கப்பட்டன.
- குடிசைகளிலும், குறைந்த வருமானம் உள்ளவர்கள் வாழும் பகுதிகளிலும் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒரு லட்சம் கோடி ரூபாயில் 77 ஆயிரத்து 640 கோடி ரூபாய் மதிப்பிலான மாநில, ஆண்டுச் செயல் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. 75 ஆயிரத்து 829 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் கள அளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- பத்தாயிரத்து 654 கோடி ரூபாய் செலவிலான திட்டங்கள் நிறைவடைந்து விட்டன. 65 ஆயிரத்து 175 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்கள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.
- இந்த இயக்கத்தின் முன்னுரிமைத் திட்டமான குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு 39 ஆயிரத்து 11 கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. கழிவு நீர் அகற்றுதல் கழிவுத் தொட்டிகள் திட்டத்திற்கு 32 ஆயிரத்து 546 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**அம்ருத் பற்றி:** குடிநீர் வழங்குதல், கழிவுநீர்க் கால்வாய்கள் தொட்டிகள் அமைத்தல், கழிவுநீர் மேலாண்மை, திறன்களை மேம்படுத்துதல், மழைநீர் வடிகால் அமைத்தல், மோட்டார்கள் அல்லாத நகர்ப்புறப் போக்குவரத்து ஏற்படுத்துதல், பசுமையான இடங்களையும், பூங்காக்களையும் உருவாக்குதல் ஆகியவற்றை அனைத்து இடங்களிலும் அமைக்க வேண்டும் என்று இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் நாடு முழுவதும் உள்ள 500 நகரங்களில் 60 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட நகர்ப்புற மக்கள் தொகைக்கு நன்மை பயக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்டத்தின் பல்வேறு பகுதிகள்:** திறன் வளர்த்தல், சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல், குடிநீர் வழங்குதல், கழிவுநீர்க் கால்வாய்கள் தொட்டிகள் ஆகியவற்றின் மேலாண்மை, மழைநீர் வடிகால் அமைத்தல், நகர்ப்புறப் போக்குவரத்து, பசுமைப் பகுதிகள் பூங்காக்கள் ஆகியவற்றை உருவாக்குதல் ஆகிய பல்வேறு அம்சங்கள் இத்திட்டத்தின் பகுதிகளாகும். திட்டமிட்டுகையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், தேவைக்கேற்ப கட்டமைப்புகளில் சில சிறப்பம்சங்களை சேர்த்துக்கொள்ளப் பாடுபடுகின்றன

## வெளிப்படையாகத் தெரியும் பலன்கள்

- மத்தியப்பிரதேசம் ரேவா பகுதியைச் சேர்ந்த ரத்னா சோனி, இதுவரை வழங்கப்பட்டு வந்த குடிநீர் குடிப்பதற்கு ஏற்றதாக இருக்கவில்லை என்றும், சிறுநீரகக் கற்கள் உருவாகக் காரணமாக இருந்தது என்றும், ஆனால் இப்போது இந்தப் பகுதியில் இந்த பிரச்சினை மறைந்து வருவதாகவும், குடிநீரின் தரம் மேம்பட்டுள்ளதாகவும் கூறினார்.
- நவி மும்பையைச் சேர்ந்த சஞ்சய் ஜோஷி, அங்கு முன்னர் குப்பை கொட்டும் இடமாக இருந்த ஒரு இடத்தில், நகராட்சி அமைப்பு, மிக அழகிய தோட்டத்தை அமைத்துள்ளதாகக் கூறினார்.

- தெரு விளக்குகளை எல்இடி விளக்குகளாக மாற்றுதல்
  இலக்கு: 97,93,386
  மாற்றப்பட்டவை: 62,78,571
- திறன் வளர்த்தல்
  இலக்கு: 45,000
  பயிற்சி அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை: 52,327
- குடிநீர்க் குழாய்களுக்கான ஆற்றல் தணிக்கை
  ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டவை: 446 நகரங்கள்
  தணிக்கை நிறைவடைந்தவை: 358 நகரங்கள்
- நகரங்களுக்கான தரவரிசை
  அளிக்கப்பட்டவை: 485
  நிறைவடைந்தவை: 468
- இணையவழிக் கட்டிட அனுமதி முறை (Online Building Permission System - OBPS).
  டெல்லியிலும், மும்பையிலும் நடைமுறையில் உள்ளது
- 439 அம்ருத் நகரங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

அம்பேத்காரை மேற்கோள் காட்டிய பிரதமர் நரேந்திர மோடி, “அம்பேத்கர் நகரமயமாதலை ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை; வறியவரிலும் வறியவர்களுக்கும் வாய்ப்புகளை வழங்குபவை நகரங்கள் என்று அவர் கற்பனை செய்திருந்தார்; அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான திறவுகோல் நகரங்கள் என்று அவர் கருதினார்” என்றார். பிரதமர் நரேந்திர மோடி மேலும் கூறியதாவது: “அனைவருக்கும், குறிப்பாக நமது இளைஞர்களுக்கு, வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல, புதிய, அளவற்ற வாய்ப்புகளை உருவாக்கும் இடமாக நகரங்கள் அமைய வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் செல்வச் செழிப்புடனும், மகிழ்ச்சியுடனும் வாழ முடிகிற வகையில் நகரங்கள் இருக்க வேண்டும். ஏழை எளியவர்கள், தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் உட்பட அனைவருக்கும் மரியாதையான ஒரு வாழ்க்கை கிடைக்கும் இடமாக நகரங்கள் திகழ வேண்டும்“. ■

*பிரதமரின் முழு உரையையும் கேட்க இந்த க்யூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*





# நக்சல்கள் பகுதியில் வளர்ச்சிக்கான சாலை

*மகாராஷ்டிராவில் கட்ச்சிரோலி மாவட்டத்தில் 3 முக்கிய பாலங்கள் மற்றும் 2 சாலை மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்கி வைத்ததன் மூலம், நக்சல் தொந்தரவு அதிகம் உள்ள அந்தப் பகுதி வளர்ச்சிக்கான புதிய யுகத்தை நோக்கிய பயணத்தைத் தொடங்கியுள்ளது.*

எல்லோருடைய வளர்ச்சிக்காகவும், எல்லோருடைய நம்பிக்கையுடனும் ஒன்றுபட்டிருத்தல் (சப்கா சாத் சப்கா விகாஸ்) என்ற நோக்கத்தை மனதில் கொண்டு, பின்தங்கிய மற்றும் நக்சல் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை அரசு வேகப்படுத்தியுள்ளது. பிரதமரின் கிராமப்புற சாலைகள் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப் பணிகளுடன் சேர்த்து, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், சாலை மற்றும் பாலங்கள் இணைப்பு முயற்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதனால், முன் எப்போதையும்விட அதிக வேகத்தில் நெடுஞ்சாலை அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. 2014-க்கு முன்பு இருந்ததைவிட, இரு மடங்கு வேகத்தில் பணிகள் நடைபெறுகின்றன.

மகாராஷ்டிர மாநிலம் கட்ச்சிரோலி மாவட்டத்தில் 3 முக்கிய பாலங்கள் மற்றும் 2 சாலை மேம்பாட்டுத் திட்டங்களை 2020 ஆகஸ்ட் 30 ஆம் தேதி சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி காணொளி மூலம் தொடங்கி வைத்தார்.

நிஜாமாபாத் - ஜக்தல்பூர் சாலையில் (என்.எச். 63) பிரனாஹிதா ஆற்றின் மீது, ரூ.168 கோடி செலவில் 855 மீட்டர் நீளம் உள்ள பாலம்; நிஜாமாபாத் - ஜக்தல்பூர் சாலையில் (என்.எச். 63) இந்திராவதி ஆற்றின் குறுக்கே படகுடம் கிராமத்தில் ரூ.248 கோடி செலவில் 630 மீட்டர் நீளத்துக்கான உயர்நிலைப் பாலம்; பெஜூர்பள்ளி - அஹேரி சாலையில் லன்கச்சென் கிராமம் அருகே 30 மீட்டர் நீளத்துக்கான உயர்நிலைப் பாலம் ஆகியவற்றை அமைச்சர் திறந்து வைத்தார்.


பெஜூர்பள்ளி - அஹேர் சாலையில் (எஸ்.எச். 275) வாட்ரா மற்றும் மோயாபின்பெடா இடையிலான பகுதி, கராஞ்சி - புஸ்ட்டோலா சாலை பகுதி ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகளும் தொடங்கப்பட்டன.

இந்தப் புதிய திட்டங்கள் தொடங்கப்படுவதன் மூலம் கட்ச்சிலோலி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையின் நீளம் 54 கிலோ மீட்டரில் இருந்து 647 கிலோ மீட்டராக அதிகரிக்கிறது. கட்ச்சிரோலி மாவட்டத்தில் ரூ.1,740 கோடி மதிப்பில் 541 கிலோ மீட்டர் நீளத்துக்கான 44 சாலைத்



> கட்டமைப்பு தொடர்பான திட்டங்களின் பணிகளின் அளவும், வேகமும் முன் எப்போதும் கண்டிராதவை. 2014-க்கு முன்பு இருந்ததைவிட இப்போது இரு மடங்கு வேகத்தில் பணிகள் நடக்கின்றன. 2014-க்கு முந்தைய நிலையுடன் ஒப்பிடும்போது, நெடுஞ்சாலைகளுக்கு 5 மடங்கு அதிக நிதி செலவிடப் பட்டுள்ளது. வரும் 4 - 5 ஆண்டுகளில் கட்டமைப்புத் துறையில் ரூ.110 லட்சம் கோடி செலவிட அரசு அறிவிப்பு செய்துள்ளது.
>
> **பிரதமர் நரேந்திர மோடி**

**ஆண்டுதோறும் அமைக்கப்படும் சாலை குறித்த தகவல்**




**நக்சல் பிரச்சினை உள்ள மாநிலங்கள்:** சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, பிகார், ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, மத்தியப் பிரதேச மாநிலங்களில் நக்சல்கள் பிரச்சினை உள்ளது. 2019இல் 670 நக்சல் வன்முறைகள் நடந்ததில் பொது மக்கள் 150 பேர், பாதுகாப்புப் படையினர் 52 பேர், 145 நக்சல்கள் கொல்லப்பட்டனர். 1,267 நக்சல்கள் கைது செய்யப்பட்டனர்.

**இதுவரை உருவாக்கிய சாலைகள் (கி.மீ.யில்)**

| | |
|---|---|
| நெடுஞ்சாலைகள் | 1,32,500 |
| மாநில நெடுஞ்சாலைகள் | 1,56,694 |
| மற்ற சாலைகள் | 56,08,477 |
| மொத்த நீளம் | 58,97,671 |

திட்டங்களுக்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

``கட்ச்சிரோலி போன்ற நக்சல் பாதிப்பு அதிகம் உள்ள மாவட்டத்தில், தொலைதூரப் பகுதிகளுக்குச் செல்ல, அனைத்துப் பருவநிலைகளிலும் தாக்குபிடிக்கக் கூடிய சாலை வசதி ஏற்படுத்துவதால், அந்தப் பகுதியில் அடுத்த 2 ஆண்டுகளில் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும், மாவட்டத்தில் அனைத்து நிலைகளிலும் முன்னேற்றம் ஏற்படும்'' என்று நிதின் கட்கரி கூறியுள்ளார்.

## நக்சல் அச்சத்தைத் தவிர்க்க காவல் துறை சாவடி உருவாக்கம்

நக்சல்களின் மிரட்டல்களுக்கு மத்தியில் கட்ச்சிரோலி மாவட்டத்தில் பாலங்கள் கட்டும் பணிகளை முடித்தமைக்காக பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களைப் பாராட்டிய நிதின் கட்கரி, இது போர் போன்ற சூழ்நிலையாக இருப்பதால் காவல் துறையினர் கண்காணிப்புச் சாவடி அமைக்கப்பட வேண்டும் என்று கூறினார். வாயின்கங்கா, பாண்டியா, பெரிகோட்டா, பெரிமிலி ஆறுகளின் குறுக்கே மற்ற முக்கியமான பாலங்களுக்கான திட்டங்களுக்கும் அமைச்சர் அடிக்கல் நாட்டினார். இந்தத் திட்டங்களால் போக்குவரத்து இணைப்பு வசதி மேம்படும். எனவே கட்ச்சிரோலி மாவட்டத்தில் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான தேவையாக இருக்கும் போக்குவரத்து வசதியும் மேம்படும்.


## கோவிட்-19 சூழலில் இலக்கைவிட கூடுதலாக 400 கிலோ மீட்டர் சாலைகள்

கொரோனா பெருந்தொற்று காலத்திலும், சாலைகள் அமைக்கும் வேகத்தில் சாதனை படைக்கப் பட்டுள்ளது. அது இலக்கை அடைந்திருப்பதுடன், கூடுதலாக 400 கிலோ மீட்டர் நீளத்துக்கான சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையில் தொழிலாளர்கள் பெருமளவில் குடிபெயர்ந்தனர். திட்டப்பணிகள் தாமதமாகும் அல்லது நின்று போகும் என்ற அச்சம் இருந்தது. இருந்தாலும், முறையான மேலாண்மை மற்றும் ஆயத்தங்கள் காரணமாக, 2,700 கிலோ மீட்டர் என்ற இலக்கை எட்டியது மட்டுமின்றி, கூடுதலாக 400 கிலோ மீட்டர் நீளம் சேர்த்து மொத்தம் 3,100 கிலோ மீட்டர் அளவுக்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலை அமைச்சகம் பணிகளை முடித்துள்ளது. கொரோனா வைரஸ் பாதிப்பு இருந்த நிலையிலும், சாலைகளை வேகமாக அமைக்கும் பணிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டது என்று ஒரு நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கூறியுள்ளார். ஒப்பந்தங்களை விரைவாக அளிப்பதால், சாலைப் பணிகள் விரைவாக முடிக்கப்படுகின்றன. ■





# உயர்வுக்கான தொழில்திறன் பயிற்சி
# புதிய உச்சங்கள்

**இளம் தலைமுறையினரைப் பயனுள்ள மனிதவளமாக மாற்றுவதற்கு, அவர்களுக்குப் புதிய தொழில்திறன் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம். 2015 ஜூலை 15ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தொழில் திறன்மிக்க இந்தியா மிஷன் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, தொழில் துறையின் தேவைகளைக் கருத்தில் கொண்டு இளைஞர்களுக்குத் தொழில் திறன் பயிற்சி அளித்து, தங்கள் வாழ்வுக்கான தேவையை அவர்களே சம்பாதித்து, தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்பது நோக்கமாக இருந்தது. இதனால் கடந்த 5 ஆண்டுகளில் 5.52 கோடி இளைஞர்கள் தொழில் திறன் பயிற்சி பெற்றுள்ளனர்.**


அய்ஜாஸ் அஹமது தார்


அய்கான் கோஷ்

ஜம்மு காஷ்மீரில் புட்காம் மாவட்டத்தில் தொலைதூரத்தில் உள்ள பகுதியைச் சேர்ந்த அய்ஜாஸ் அஹமது தார், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த அய்கான் கோஷ் ஆகியோரின் கனவுகள் இத் திட்டத்தின் மூலம் நனவாகியுள்ளன. மேல்நிலைக் கல்வி முடித்த பிறகும் வேலை கிடைக்காமல் அய்ஜாஸ் சிரமப்பட்டு வந்தார். அவருடைய ஒரு நண்பரின் ஆலோசனையின்படி, பிரதமரின் கௌஷல் கேந்திரா புட்காம் மையத்தில் விருந்தோம்பல் பிரிவில் அலுவலகப் பணி சார்ந்த பயிற்சியில் சேர்ந்தார். அவருக்குப் பயிற்சி அளித்து, மாதிரி நேர்காணல்கள்



## 5 ஆண்டுகளில் எட்டிய மைல்கற்கள்

- 2014ஆம் ஆண்டில் நாட்டில் 10,750 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ஐடிஐ) இருந்தன. 5 ஆண்டுகளில் சுமார் 5,000 புதிய ஐ.டி.ஐ.கள் திறக்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் இந்த ஐ.டி.ஐ.களில் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை 27.56 லட்சமாக உயர்ந்துள்ளது. ஐ.டி.ஐ. சேர்க்கை அளவு 34.63 லட்சம் அதிகரித்துள்ளது. 2015-இல் இருந்ததைவிட 85.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

- 2014ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற சுமார் 70 லட்சம் இளைஞர்கள் இருந்தனர். இப்போது, ஆண்டுதோறும், தொழில் திறன்மிக்க இந்தியா மிஷன் திட்டத்தில் சுமார் 1 கோடி பேர் சேர்கின்றனர். கடந்த 5 ஆண்டுகளில் 5 கோடிக்கும் மேலானவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

நடத்தப்பட்டன. பிறகு அவர் ஸ்ரீநகர் விமான நிலையத்தில் கே.எப்.சி. நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். இப்போது தன் குடும்பத்துக்கு உதவியாக கணிசமாக அவர் வருமானம் பெறுகிறார். அய்கான் கோஷ் பேச்சுத் திறனற்ற மாற்றுத் திறனாளி. டீன் ஏஜ் பருவத்தில் செவித்திறனும் பாதிக்கப்பட்டது. அவர் குழந்தையாக இருந்தபோது, பெற்றோர் விபத்தில் இறந்துவிட்டனர். அவருடைய மாமா தான் அவரை வளர்த்தார். அய்கான் கோஷ் பள்ளிப் படிப்பை முடித்துள்ளார்.

## 7 கௌஷால் பாரத், குஷால் பாரத் திட்டத்துக்கு 7 அம்ச வழிகாட்டி

ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவில் தொழில் திறன்கள் இருந்தும், முறைப்படியான பயிற்சி மற்றும் சான்றிதழ்கள் போன்ற அங்கீகாரங்கள் இல்லாதவர்களுக்கு உதவும் நோக்கில் கௌஷால் பாரத் குஷால் பாரத் திட்டம் தொடங்கப்பட்டது. அவர்கள் வேலையில் சேருவதற்குத் தேவையான முறைப்படியான பயிற்சி மற்றும் சான்றிதழ்களை இத் திட்டம் அளிக்கும்.



தொழில்திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, இது தொழில்திறன்களை மேம்படுத்துவதுடன், வளத்தையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்று பிரதமர் கூறினார். இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் 5 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இத் திட்டத்தின் கீழ் 34 லட்சம் இளைஞர்களுக்குக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

தொழில் திறன்மிக்க இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக பிரதமரின் கௌஷால் விகாஸ் யோஜ்னா தொடங்கப்பட்டது. பயிற்சிக்காக செலவு செய்ய முடியாத இளைஞர்களுக்காக இத் திட்டம் தொடங்கப்பட்டது.

திட்டங்கள் எளிதாக அமல் செய்யப்படுவதை உறுதி செய்ய மற்ற அமைச்சகங்களுடன் இணைந்து செயல்படும் தொழில்திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தை அரசு உருவாக்கியது.

Skill India
कौशल भारत - कुशल भारत

விண்ணப்பதாரர் பதிவு செய்ததும், 40 தொழில்நுணுக்கங்களின் பட்டியலில் இருந்து, தாம் பயிற்சி பெற விரும்பும் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும். பயிற்சி முடிந்ததும் அவருக்குச் சான்றிதழ் அளிக்கப்படும்.

**தொழில் திறன்மிக்க இந்தியா:** தேசியத் தொழில் திறன் மேம்பாட்டு முகமை, தேசியத் தொழில்திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பயிற்சிக்கான தலைமை இயக்குநரக அமைப்பு ஆகியவை இணைந்து இத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றன. இதே போன்ற வகையில் மாநிலங்களில் இத் திட்டம் அமல் செய்யப் படுகிறது.

தொழில்திறன்மிக்க இந்தியா திட்டத்தின் கீழ் பயன்பெற http://pmkvyofficial.org இணையதளத்தில் தங்கள் விவரங்களை நிரப்பி விண்ணப்பதாரர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## 5 பிரிவுகளில் 92 பேருக்கு தொழில்திறன் விருது

'தங்கள் தொழில் திறன்களுக்குப் புதிய வடிவம் தருவதன் மூலம் தற்சார்பு இந்தியாவுக்கான புதிய சக்தியாக இளைஞர்கள் உருவாக வேண்டும்'



2020 கௌஷலச்சார்யா விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியில், ``உலகளாவிய தேவைகளுக்கு ஏற்பட பணித் திறன்களை அளிப்பது தான் அரசின் நோக்கம். இதை நோக்கமாகக் கொண்டு வலுவான தொழில்திறன் பயிற்சி சூழலை உருவாக்க பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன'' என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியதில் இருந்தே, தொழில்திறன் வளர்ச்சிக்கான முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். ``தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்த நாடும் வந்துள்ளது. மாறிவரும் காலத்தில் நாம் வாழும் நிலையில், ஒவ்வொரு இந்தியரும் தற்சார்புடன் இருக்க வேண்டிய அவசியம் உள்ளது'' என்று அவர் கூறியுள்ளார்.

- **கௌஷலாச்சார்யா விருது:** தொழில் திறன் மேம்பாட்டு அமைச்சகம் ஆண்டுதோறும் கௌஷலாச்சார்யா சமடர் விருதுகள் அளிக்கிறது.
- இந்த ஆண்டு 5 வெவ்வேறு பிரிவுகளில் 92 தொழில் திறன் பயிற்றுநர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
- தொழில்முனைவுப் பயிற்சிப் பிரிவில் 3 பயிற்சியாளர்களுக்கு விருதுகள் அளிக்கப்பட்டது. ஜன் சிக்ஷான் சான்ஸ்தான் பிரிவின் கீழ் 15 பேருக்கும், குறுகிய காலப் பயிற்சிப் பிரிவில் 14 பேருக்கும், நீண்டகால பயிற்சிப் பிரிவில் 44 பேருக்கும், பெருநிறுவனங்கள் பிரிவில் 15 பேருக்கும் விருதுகள் அளிக்கப்பட்டன.

Scan QR Code for Complete speech of the PM on the occasion of Kaushalacharya Award

### தொழில் திறன்மிக்க இந்தியா திட்டத்தின் 5 ஆண்டுகள்

- கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 5000 புதிய தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ITI) உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 1 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.
- 723 பிரதமரின் தொழில்திறன் மையங்களுடன், 33 தேசிய தொழில்திறன் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. Microsoft, IBM, Adobe மற்றும் NASSCOM போன்ற நிறுவனங்கள் இத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
- சர்வதேசத் தொழில்திறன் போட்டிகளில் இந்தியா பங்கேற்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுடன் தற்சார்புத் தொழில்திறன் பயிற்சி பெற்ற தொழிலாளரை அடையாளம் காண்பதற்கான (ASEEM) முனையம் தொடங்கப்பட்டுள்ளது. தொழில்திறன் பயிற்சி முடித்து வேலை தேடுவோர், நிரந்தர வேலை வாய்ப்புகளைக் கண்டறிய இது உதவியாக இருக்கும்.
- உலகத் தொழில்திறன் போட்டியில் 2017இல் 29ஆவது இடத்தில் இருந்த இந்தியா, 2019இல் 13ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.


### கோவிட் நெருக்கடியில் ஒரு வரப்பிரசாதம்

- கொரோனா காலத்தில் இந்தப் பயிற்சி நிலையங்கள் மற்றும் ஐ.டி.ஐ.கள் பெரும்பங்கு ஆற்றி, தேசத்துக்கு உதவியுள்ளன. தானியங்கிக் கிருமிநாசினிக் கருவிகள், வடிவமைத்தல் / உருவாக்குதல், முகக்கவச உறைகள், முழு உடல் கவச உடைகள் தயாரிப்பு, மருத்துவர்களுக்கு உதவ ரோபோக்கள் போன்ற தயாரிப்புகளில் இவர்கள் பங்களிப்பு செய்துள்ளனர்.
- சுகாதார அமைச்சகத்தின் தீவிர ஒத்துழைப்புடன் 1.75 லட்சம் சுகாதாரத் தொழில்நிபுணர்களின் தகவல் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், திறன் குறைபாடுகளால் மேற்படிப்பைத் தொடர முடியவில்லை. பிரதமரின் கௌஷல் கேந்திரா திட்டத்தில் தையல் மெஷின் இயக்குபவர் பயிற்சியில் சேர்ந்தார். அதில் தொழில்திறன் பயிற்சி பெற்றதில் நம்பிக்கை அதிகரித்தது. உடல் ரீதியிலான இயலாமைகளை எப்படி வெற்றி கொள்வது என அவருக்குப் பயிற்சிகள் அளித்தனர். இப்போது அவர் Frontier Protective wear Pvt Ltd என்ற நிறுவனத்தில் பணிபுரிகிறார். நல்ல சம்பளம் பெறுகிறார். அதேபோல கேரளாவில் கன்னூர் மாவட்டத்தைச் சேர்ந்த அஜேஷ், டெல்லியைச் சேர்ந்த பிரியங்கா ஆகியோரும் தொழில் திறன்மிக்க இந்தியா மிஷன் திட்டம் மூலமாக கனவுகளை நனவாக்கிக் கொண்டுள்ளனர். இளைஞர்களுக்கு நம்பிக்கையை உருவாக்கி பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இருக்கச் செய்வதற்கு இந்தப் பயிற்சி உதவுகிறது. பல மில்லியன் பேர் தங்கள் வாழ்வாதாரத்தை சம்பாதிப்பதற்கான கதவுகளை இந்தத் திட்டம் திறந்து வைத்துள்ளது. தற்சார்பு இந்தியா திட்டத்திற்கு உந்துதல் கொடுப்பதாகவும் இது இருக்கும். ■

# அனைத்து கிராமங்களுக்கும் கண்ணாடி இழைக் கம்பிவட வசதி

நாட்டில் மிக தொலைவில் உள்ள கிராமத்திற்கும் கூட கண்ணாடி இழைக் கம்பிவட வசதி மூலம் இணைய இணைப்பு வசதி அளிக்கும் பணிகளை அரசு தொடங்கியுள்ளது.



இந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, நாட்டில் மீதியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் 1000 நாட்களில் கண்ணாடி இழைக் கம்பிவட வசதி மூலம் இணைய இணைப்பு வசதி செய்து தரப்படும் என்று அறிவித்தார். அவருடைய செயல்படும் பாணியை நிரூபிக்கும் வகையில், மின்னல் வேகத்தில் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. அறிவிப்பு வெளியாகி 36 நாட்களில், 2020 செப்டம்பர் 21 ஆம் தேதி ஹர் கான் மேயின் கண்ணாடி இழைக் கம்பிவட த்வாரா இன்டர்நெட் சுவிதா திட்டப் பணிகள் தொடங்கின.

2014-க்கு முன்னர், 5 டஜன் பஞ்சாயத்துகளுக்கு மட்டுமே கண்ணாடி இழைக் கம்பிவட இணைய இணைப்பு வசதி இருந்தது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளில் 1.5 லட்சம் பஞ்சாயத்துகளுக்கு இந்த வசதி கிடைத்துள்ளது. இப்போது அடுத்த 1000 நாட்களில், அனைத்து 6 லட்சம் கிராமங்களுக்கும் கண்ணாடி இழைக் கம்பிவட இணைய இணைப்பு. வசதியை செய்து தர அரசு முனைந்துள்ளது. ``வெகு சீக்கிரத்தில், நகரங்களைப் போல, நமது கிராமங்களும் இணையச் சந்தைகளில் இணைந்திருக்கலாம். நாட்டில் ஒவ்வொரு கிராமம் மற்றும் ஒவ்வொரு வீடும் அதிவேக இணைய இணைப்பு வசதியைப் பெற்றிருக்கும்'' என்று பிரதமர் கூறியுள்ளார்.

டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் உலக அளவில் முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கிறது என்பதில் இருந்து, அதிவேக இன்டர்நெட் வசதி கிடைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும். 2020 ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் ரூ.3 லட்சம் கோடி அளவுக்கு ஹிறிமி மூலம் பரிவர்த்தனைகள் நடந்துள்ளன. ஆனால் கிராமங்களுக்கும் நல்ல தரமான, அதிவேக இன்டர்நெட் வசதி கிடைக்க வேண்டியது முக்கியம். ■

## ஆரம்ப கட்டம்


- ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வை-பை ஹாட்ஸ்பாட் நிறுவப்பட்டு, இணையச் சேவை அளிக்க பொதுச் சேவை மையம் தொடங்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு நிறுவனங்கலுக்கு ஒரு வை-பை மற்றும் திஜிஜிபி வசதி இலவசமாக அளிக்கப்படும்.

## திட்டத்தின் நோக்கங்கள்

- அனைத்து கிராமங்களையும் டிஜிட்டல் கிராமங்களாக மாற்றுவது
- கிராம மக்களுக்கு டிஜிட்டல் அதிகாரம் கிடைக்கச் செய்தல், டிஜிட்டல் வசதியைப் பரவச் செய்தல், டிஜிட்டல் இடைவெளியை நிரப்புதல் மற்றும் அனைத்து கிராமத்தினருக்கும் டிஜிட்டல் சேவைகள் கிடைக்கச் செய்தல்
- சமூக பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்பு நிலையை ஊக்குவித்தல்
- இத் திட்டம் அமல் செய்யப்பட்ட பிறகு, கிராமங்களின் சமூகப் பொருளாதாரத் தாக்கம் மதிப்பீடு செய்யப்படும்

## திட்டத்தின் பயன்கள்

- இ-கல்வி, இ-வேளாண்மை, டெலி- மருத்துவம், டெலி-சட்ட உதவி மற்றும் இதர சமூகப் பாதுகாப்பு வசதிகள் திட்டத்தை அமல் செய்ய இது உதவும்.
- ஒரு கிளிக் செய்வதன் மூலம் அனைத்து டிஜிட்டல் வசதிகளையும் குடிமக்கள் பெறலாம்.
- விதைகள், வானிலை போன்ற தகவல்களை விவசாயிகள் உரிய காலத்தில் பெறலாம்; தேசிய அளவிலான சந்தை வசதி கிடைக்கும்
- உலகில் எந்த இடத்தில் உள்ளவருக்கும் வியாபாரிகள் தங்கள் விளைபொருள்களை விற்க முடியும்



# ஓராண்டு பயன்

# உடல் தகுதிமிக்க இந்தியா

*ஆரோக்கியமான மக்கள், ஆரோக்கியமான குடும்பங்கள் மற்றும் ஆரோக்கியமான சமுதாயம் ஆகியவைதான் புதிய இந்தியாவை சிறந்த இந்தியாவாக ஆக்குவதற்கான வழிமுறைகள்*

*- பிரதமர் நரேந்திர மோடி*

*உடல் தகுதிமிக்க இந்தியா இயக்கம் என்ற திட்டத்தைக் கடந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். மக்கள் தங்கள் உடல் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என அப்போது அவர் அழைப்பு விடுத்தார். 2014இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து ஓய்வின்றி உழைத்து வரும் பிரதமர், - ஒரே பாரதம் உன்னத பாரதம் - என்ற கனவை நனவாக்குவதற்கு மக்களின் உடல் தகுதி எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை உணர்ந்திருக்கிறார்.*

உடலை நல்ல தகுதியுடன் வைத்துக் கொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை கோவிட்-19 நோய்த் தொற்று கோடிட்டுக் காட்டியுள்ளது. உடல் ரீதியில் ஆரோக்கியமாக உள்ளவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி பலமாக உள்ளவர்களுக்கு கோவிட்-19 நோய்த் தொற்று வருவதற்கான வாய்ப்பு குறைவு என்றும், அவர்கள் வேகமாகக் குணம் அடைகிறார்கள் என்றும் உலகம் முழுக்க உள்ள மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இந்த இயக்கம் தொடங்கிய ஓராண்டைக் குறிப்பிடும் வகையில் 2020 செப்டம்பர் 24 ஆம் தேதி, `வயதுக்குப் பொருத்தமான உடல் தகுதி பயிற்சிகள்' என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். `தினமும் 30 நிமிட நேரம் உடல் தகுதிக்கு ஒதுக்குதல்' என்ற கருத்தை அதன் மூலம் அவர் வலியுறுத்தினார். அப்போது பேசிய அவர், ``உடலை தகுதியாக வைத்துக் கொள்வது, சிலர் நினைப்பது போல கஷ்டமானது இல்லை. சில விதிகளைப் பின்பற்றுவதன் மூலம், சிறிது கடினமாக உழைப்பதன் மூலம் நாம் ஆரோக்கியமாக இருக்க முடியும்'' என்று கூறினார்.

உடல் தகுதிமிக்க இந்தியா இயக்கம் என்பது இப்போதைய தேவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், கொரோனா காலத்தில் அதன் தேவை உணரப்பட்டுள்ளது என்றும் பிரதமர் கூறினார். இப்போது யோகா, உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, ஓடுதல், நீச்சல், ஆரோக்கியமான உணவுப் பழக்கம், ஆரோக்கியமான வாழ்க்கைமுறை ஆகியவை மக்களின் இயல்பான விஷயங்களாகிவிட்டன என்று அவர் குறிப்பிட்டார். மக்கள் யோகா செய்யலாம்



### பிரதமருக்குப் பிடித்த உணவு

காலை சிற்றுண்டியுடன், குறைந்த சர்க்கரை போட்ட, இஞ்சி டீ குடிக்க விரும்புவார். அவருக்கு பிடித்த உணவுகளில் கிச்சடியும் உண்டு. அது தவிர, பாக்ரி, காண்ட்வி, தோக்லா உள்ளிட்ட குஜராத் உணவுகளும் பிடிக்கும். இட்லி, சாம்பார், தோசை, போஹா ஆகியவற்றையும் விரும்புவார். மதியம் சிறிது குஜராத்தி அல்லது தென்னிந்திய உணவுகள் சாப்பிடுவார். இரவு ரொட்டி பருப்பு அல்லது கிச்சடி மற்றும் பருப்பு கடைந்தது.

### பிரதமரின் வழக்கமான பணிகள்

கடந்த மாதம் 70 வயதைத் தொட்ட பிரதமர் 18 மணி நேரம் பணியாற்றுகிறார்; அவர் தினம் 4 - 5 மணி நேரம் தான் தூங்குகிறார். அவ்வளவு வேலைகளுக்கு இடையிலும், காலையில் இருப்பதைப் போன்ற அதே உற்சாகத்துடனும், சக்தியுடனும் இரவிலும் அவர் இருப்பது, எதிரிகளுக்கும் பிடித்த விஷயமாக உள்ளது. பிரதமர் அதிகாலை 5 மணிக்கு எழுகிறார். காலைப் பணிகளை முடித்துக் கொண்டு சுமார் 45 நிமிடங்கள் யோகா மற்றும் பிராணாயாமம் செய்கிறார்.

அல்லது பாட்மிண்டன், டென்னிஸ் அல்லது கால்பந்து விளையாடலாம், கராத்தே பயிற்சி செய்யலாம் அல்லது கபடி விளையாடலாம் அல்லது தங்களுக்குப் பிடித்தமான விஷயத்தை தினமும் குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் செய்யலாம் என்று அவர் கூறினார்.

## உடல்தகுதி ஏன் முக்கியம்

பிரதமர் நரேந்திர மோடி 2019 ஆகஸ்ட் 29-இல் உடல் தகுதிமிக்க இந்தியா இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். இந்த இயக்கத்தின் தேவைகள் குறித்து விவரித்த பிரதமர், நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தம் போன்ற வாழ்க்கை முறை சார்ந்த நோய்கள் இந்தியாவில் அதிகரித்து வருவதாகக் கூறினார். ``சில நேரங்களில் 12 - 15 வயது குழந்தைகள் கூட நீரிழிவு பாதிப்புக்கு

### விசேஷ உணவும், வழக்கமான யோகாவும் உடலைத் தகுதியாக வைக்கும்

பிரதமரின் ஆரோக்கியத்துக்கான மந்திரம் என்ன என்ற கேள்வி எழுவது இயல்புதான். இயற்கையும், காலையில் யோகா செய்வதும் அவருடைய வழக்கமான பணிகளின் அங்கமாக உள்ளது. தனது உடல்தகுதிக்காக அவர் விசேஷ உணவுப் பழக்கத்தைக் கடைபிடிக்கிறார். உடல் தகுதி குறித்து வீடியோக்களையும் அவர் பகிர்ந்துள்ளார். அவருடைய உணவுப் பழக்கம் என்பது, தேர்ந்தெடுத்து சாப்பிடுவது அல்ல. மாறாக, தேர்வுக்கு ஏற்ப ஒருவர் ஒரு நாளில் இரண்டு நேரம் மட்டும் சரியாக சாப்பிடுதல் என்பது தான் மந்திரம். உதாரணமாக காலை 10 மணி, இரவு 7 மணி என்று சரியாக பின்பற்ற வேண்டும். இந்த இரு வேளைகளிலும் 55 நிமிட நேரத்துக்குள் எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். இந்த உணவுப் பழக்கத்தைப் பிரதமர் நீண்ட காலமாக கடைபிடித்து வருகிறார். குறைந்தது 100 எம்.பி.க்கள், அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் இந்த உணவுப் பழக்கத்தை கடைபிடித்து வருகின்றனர். பல எம்.பி.க்கள் உடல் எடையைக் குறைக்க இது உதவியுள்ளது. 2019 மக்களவைத் தேர்தலுக்கு முன்பும்கூட, பிரதமர் இந்த உணவுப் பழக்கத்தை கடைபிடித்து வந்தார். இதன் பயன்களைப் பார்த்த பிறகு, மற்ற எம்.பி.க்களுக்கும் உடலை தகுதிமிக்கதாக வைத்துக் கொள்ள அறிவுரை கூறினார். இதற்காக 2020 பிப்ரவரியில் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்னதாக முறைப்படியான ஒரு முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் சுமார் 100 எம்.பி.க்கள் பங்கேற்றனர். அதேபோல பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் ஒரு முகாம் நடத்தப்பட்டது. அதில் சுமார் 3,000 பேர் பங்கேற்றனர்.

ஆளாவதாக நாம் கேள்விப்படுகிறோம். சுற்றிலும் பார்த்தால் நிறைய பேருக்கு இந்த பாதிப்பு இருப்பதை அறிவீர்கள். முன்பெல்லாம் 50-60 வயதில் தான் இருதய நோய்கள் வரும் என கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது சில நேரங்களில், 30 வயது, 35 வயது அல்லது 40 வயதான நம் மண்ணின் மகன்கள் மற்றும் மகள்கள் மாரடைப்பால் இறந்து போகிறார்கள். இது கவலைக்குரிய விஷயம். ஆனால் இதில் இருந்து மீள நம்பிக்கை உள்ளது. இப்போதுள்ள நோய்களுக்கு மத்தியில், நம்பிக்கை பற்றி நான் பேசுவது குறித்து நீங்கள் ஆச்சரியப்படலாம். இயல்பாகவே நான் மிகவும் நேர்மறை எண்ணம் கொண்டவன். எனவே, இதிலும் நமக்கு நல்ல விஷயங்கள் இருப்பதைக் காண்கிறேன்'' என்று அவர் கூறினார். ``நாம் வழக்கமாக உடற்பயிற்சி செய்து, உடலைத் தகுதியுடனும்,பலமாகவும் வைத்துக் கொண்டால் நமக்குள் ஓர் உணர்வு உருவாகி - நம்மை நாமே தான் உருவாக்குகிறோம் என்று சொல்வதைக் கேட்கலாம். தன்னம்பிக்கை பெருகும். ஒருவருக்கு நம்பிக்கை அதிகமானால், வாழ்க்கையில் பல துறைகளில் வெற்றிகளை எட்ட முடியும்'' என்று அவர் கூறினார்.

## தடகள வீரர்கள், உடல் தகுதி நிபுணர்களுடன் பிரதமர் கலந்துரையாடல்

உடல் தகுதிமிக்க இந்தியா இயக்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி, ஏழு விளையாட்டு வீரர்கள், உடல் தகுதி நிபுணர்கள் மற்றும் பிறருடன் பிரதமர் கலந்துரையாடினார். - மாற்றுத்திறனாளி ஒலிம்பிக்கில் ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்ற தேவேந்திர ஜாஜாரியா. ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த கால்பந்து கோல் கீப்பர் அப்சன் ஆசிக், நடிகரும் மாடலுமான மிலிந்த் சோமன், சத்துணவு நிபுணர் ருஜுடா திவேகர், சுவாமி சிவதியானம் சரஸ்வதி, கிரிக்கெட் வீரர் விராட் கோலி, கல்வியாளர் முகுல் கனிட்கர் ஆகியோருடன் பிரதமர் பேசினார்.

அந்தக் கலந்துரையாடலின் போது `உடல் தகுதிமிக்க இந்தியா இயக்கம்' உண்மையில் `ஹிட் இந்தியா இயக்கமாக' உள்ளது என்று பிரதமர் கூறினார்.

சுவாமி விவேகானந்தரை மேற்கோள் காட்டிப் பேசிய பிரதமர், ``பலம் தான் வாழ்க்கை, பலவீனம் என்பது மரணம், விரிவாக்கம் என்பது வாழ்க்கை, முடங்கிப் போவது மரணம்'' என்று கூறினார்.

FIT INDIA

### உடல் தகுதிமிக்க இந்தியா இயக்கத்தின் ஓராண்டுப் பயணம்

2019-இல் தொடக்க நிகழ்ச்சியில் 55,000 இடங்களில் இருந்து, 30 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

- உடலை தகுதிமிக்கதாக வைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளை அறிந்து கொள்ள கடந்த ஓராண்டில் பிட் இந்தியா இணையதளத்தை (www.fitindia.gov.in) குறைந்தது 1 கோடி பேர் பார்த்துள்ளனர்
- 2.5 லட்சம் பள்ளிக்கூடங்கள் பதிவு செய்துள்ளன. 1.67 லட்சம் பள்ளிக்கூடங்களுக்கு பிட் இந்தியா சான்றளிக்கப் பட்டுள்ளது
- உடல் தகுதி மற்றும் விளையாட்டுக்கு குறைந்தது ஒரு வகுப்பு நேரத்தை ஒதுக்குவதற்குப் பள்ளிக்கூடங்கள் உறுதி அளித்துள்ளன
- பிளாக்கிங் செய்வது உடலை ஆரோக்கியமாக வைக்கவும், சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைக்கவும் சரியான தேர்வாக இருக்கும். ஜாக்கிங் மற்றும் குப்பைகளை அகற்றுதல் ஆகியவை இணைந்த செயல்பாடாக இது உள்ளது
- பிட் இந்தியா சுதந்திர ஓட்டம் 30 கோடி மக்களை எட்டியுள்ளது
- பிட் இந்தியா வாரத்தில் 15,000-க்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் பங்கேற்றுள்ளன
- பிட் இந்தியா சைக்ளோத்தானில் 16,000 இடங்களில் குறைந்தது 35 லட்சம் பேர் பங்கேற்றனர்
- பெண்களுக்கான பிட் இந்தியா பேரணியில், அவர்களின் ஆரோக்கியத்துக்கு சிறப்பு கவனம் தரப்படுகிறது

#### கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு எதிராக பிட் இந்தியா

- கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கையில், பிட் இந்தியா மூலம் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன
- முடக்கநிலை காலத்தில் பிரச்சாரத்தில் பல லட்சம் குடும்பங்கள் பங்கேற்று, தங்கள் வாழ்வில் ஓர் அங்கமாக்கிக் கொண்டன
- ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டத்தின் கீழ் 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு உள்ளூர் விளையாட்டுகள் காண்பிக்கப்பட்டன நாட்டின் பாரம்பரிய விளையாட்டுகள் பற்றிய விழிப்புணர்வை இது ஏற்படுத்தியது
- உடல்தகுதி உரையில் 3.5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். விளையாட்டு வீரர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்
- வெவ்வேறு வயதுப் பிரிவினருக்கு அதாவது 5 - 18 வயதினர், 18 - 65 வயதினர், 65வயதுக்கும் மேற்பட்டவர்கள் என தனித்தனிப் பயிற்சி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன

SCAN QR CODE FOR PM'S COMPLETE SPEECH ON FIT INDIA

# கோவிட்-19 காலத்திலும், ஏராளமான மசோதாக்கள் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன

*நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரின்போது, மக்களவையும், மாநிலங்களவையும் 100 சதவீதத்திற்கும் மேலாகச் செயல்பட்டுள்ளன. 11 அவசரச் சட்டங்களுக்கு மாற்றாக கொண்டுவரப்பட்ட மசோதாக்களுடன், ஏராளமான மசோதாக்கள் நாடாளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்டுள்ளன*

வளர்ச்சிப் பாதையைத் திட்டமிட்ட தடத்தில் கொண்டு செல்லும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ள நிலையில், நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர், 2020 செப்டம்பர் 14ஆம் நாள் தொடங்கி 23ஆம் நாள் வரை, விடுமுறை ஏதுமின்றி தொடர்ந்து இயங்கியது. நாடு முழுவதும் கோவிட்-19 பெருந்தொற்றை எதிர்கொண்டுவரும் சூழலிலும், இந்தக் கூட்டத் தொடரின்போது, தினந்தோறும் 2.7 மசோதாக்கள் வீதம், 27 மசோதாக்கள் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன. விவசாயிகள், தொழிலாளர்கள், கல்வி, சுகாதாரம், சுயசார்பு இந்தியா முன்முயற்சி தொடர்பான மசோதாக்களை அரசு நிறைவேற்றியுள்ளது. அரசியல் சட்டப்பிரவு 85-இன்படி மேற்கொள்ள வேண்டிய அரசியல் சாசனக் கடமைகளை நிறைவேற்றும் விதமாகவும் அத்தியாவசிய சட்டங்கள் மற்றும் இதர அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார். கோவிட் பெருந்தொற்றுக் காலத்திலும், மத்திய உள்துறை, சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறைகளின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, இருக்கைகள் மாற்றம், தளவாட ஏற்பாடுகள் உள்ளிட்ட சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு, இந்தக் கூட்டத்தொடர் நடத்தப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார். ■




### மழைக்காலக் கூட்டத் தொடர் பற்றிய ஒரு பார்வை:

- 2020 செப்டம்பர் 14 முதல் செப்டம்பர் 23 வரை, 10 நாட்களில் 10 அமர்வுகள் நடைபெற்றன
- மக்களவை 167 சதவீத அளவிற்கும், மாநிலங்களவை 100.47 சதவீத அளவிற்கும் இயங்கியுள்ளது
- இந்தக் கூட்டத்தொடரின்போது, 22 மசோதாக்கள் (மக்களவையில் 16 மசோதாக்களும், மாநிலங்களவையில் 6 மசோதாக்களும்) அறிமுகப்படுத்தப்பட்டன
- நாடாளுமன்ற இரு அவைகளிலும் சேர்த்து, 27 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன
- 11 அவசரச் சட்டங்களுக்கு மாற்றாக, நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன



# விமானத்தில் பயணிக்கும் எளிய மக்கள்

# கனவு காணும் துணிச்சல்!

சிறிய நகரங்களிலும், நடுத்தர நகரங்களிலும் விமானப் போக்குவரத்திற்கு ஊக்கம் அளிக்கும் உடான் திட்டத்தால், மண்டல அளவிலான விமானப் போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்தியதன் மூலம், 48 லட்சத்திற்கும் மேற்பட்ட எளிய மக்கள், விமானப் பயணம் மேற்கொண்டுள்ளனர்



சாலையில் செல்லும்போது, தங்களது தலைக்கு மேலே வானில் விமானம் பறப்பதை ஆச்சரியத்துடன் பார்த்து வந்த எளிய மக்களின் கனவு தற்போது நனவாகியுள்ளது. அல்லது, மனிதனால் உருவாக்கப்பட்ட இயந்திரப் பறவை தரையிறங்கும்போது இரவு நேரங்களில், விமானத்தின் பின்புறத்தில் உள்ள விட்டுவிட்டு ஒளிரும் விளக்குகளை விமானிகள் எரியவிடும்போதும் அதனை அதிசயமாக பார்ப்பது வழக்கம்.

அன்மைக்காலம் வரை, விமானத்தின் படிக்கட்டுகளில் ஏற முடியாத இந்தியர்களுக்கு, விமானப் பயணம் என்பது ஆடம்பரக் கனவாகவே கருதப்பட்டு வந்தது. குறைந்த கட்டணத்திலான விமான நிறுவனங்கள் இயங்கத் தொடங்கிய பிறகு, நடுத்தர ரகத் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் பெரும்பாலானவர்கள் விமானப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

பணக்கார வர்க்கத்தினர் விமானப் பயணம் மேற்கொள்வதும், விமான நிலையங்களில் அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்பு அளிப்பதும், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்போடு முடிந்த கதையாகி, தற்போது எளிய மக்களும் விமானப் பயணம் செய்யும் அளவிற்கு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தற்போது, எளிய மக்களும், குறிப்பாக, குறைந்த வருவாய் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், இதுவரை விமானப் போக்குவரத்து வசதி இல்லாத தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் தங்களது உறவினைர்களைக் காணவும், பொழுதுபோக்கிற்காகவும், சிறு வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் விமானப் பயணம் மேற்கொள்ள முடிகிறது.

எளிய மக்களும் விமானப் பயணம் செய்வதற்கான உடான் திட்டத்தை மத்திய அரசு தொடங்கிய பிறகு, கடந்த மூன்றாண்டுகளில், எளிய மக்களின் நிலையில் தலைகீழ் மாற்றம் நிகழ்ந்து வருவதைக் காணலாம்.

2017-ல் உடான் திட்டம் தொடங்கப்பட்டது முதல், பிரதமர் திரு.நரேந்திரமோடி விரும்பியதுபோல, சாதாரண ரப்பர் காலனிகள் அணிவோரும் தற்போது விமானத்தில் பயணம் செய்ய முடிகிறது.

## நேரமும் பணமும் மிச்சம்

ரூ.2,500 செலவு செய்தால், சாமானியனும் ஒரு மணி நேரத்தில் 500 கிலோமீட்டர் தொலைவுக்குப் பறந்து செல்லலாம். அல்லது இதே செலவில் ஹெலிகாப்டரில் அரை மணி நேரம் சுற்றிவர முடிகிறது.

2016 அக்டோபரில் உடான் திட்டம் அறிவிக்கப்பட்டது முதல், இந்திய மக்கள் அதனை நல்ல முறையில் பயன்படுத்தி, விமானப் பயணம் மேற்கொள்கின்றனர். உடான் திட்டத்தின்கீழ், இதுவரை 48 லட்சத்திற்கும் மேற்பட்டோர், விமானப் பயணம் செய்துள்ளனர். விமானப் போக்குவரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள உடான் திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, விமானப் பயணம் செய்ய விரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதுடன், சிறிய நகரங்களிலும் விமான நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டதால், ஊரகப் பகுதிகளுக்கும் விமானத்தில் செல்லும் சூழல் உருவாகியுள்ளது.

இதனைக் கவனிக்கவும் : நாடு சுதந்திரம் அடைந்தது முதல் 2016 வரை, இந்தியாவில் 70 விமான நிலையங்களில் தான், பயணிகள் மற்றும் சரக்கு விமானப் போக்குவரத்து நடைபெற்று வந்தது. உடான் திட்டம் தொடங்கப்பட்ட மூன்றாண்டுகளுக்குள், 5 ஹெலிகாப்டர் தளங்கள் உட்பட மேலும் 50 விமான நிலையங்கள் தொடங்கப்பட்டு, 281 வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படுகின்றன. உடான் திட்டத்தின் கீழ், 766 வழித்தடங்களில் விமானங்களை இயக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், ஆண்டுதோறும் 10 கோடிக்கும் மேற்பட்ட மக்கள், விமானப் பயணம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஏராளமான மாற்றங்கள் வர

**Air India**



இருக்கின்றன. 2026-27 வாக்கில், மேலும் 100 விமான நிலையங்கள் - புதிதாகவோ அல்லது பயன்பாடு இல்லாத பழைய விமான நிலையங்கள் மேம்படுத்தப்பட்டோ - இந்தியாவின் விமான வரைபடத்தில் இடம்பெற உள்ளன.

வாடகைக்கார் (டாக்ஸி) பயணத்திற்கான கட்டணத்தை விட, மிகக் குறைந்த கட்டணத்தில் விமானப் பயணம் செய்ய முடிவது தான், மிகவும் புரட்சிகரமான உடான் திட்டத்தின் வெற்றிக்கு முக்கியமான காரணமாகும். டாக்ஸி கட்டணம் கிலோமீட்டருக்கு ரூ. 8 முதல் 10 வரை வசூலிக்கப்படும் நிலையில், உடான் திட்டத்தின் கீழ், கிலோமீட்டருக்கு ரூ.5 தான் விமானப் பயணக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

உடான் திட்டம் பல்வேறு மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான உயர் வர்க்கத்தினரால் தான் விமானத்தில் பயணம் செய்ய முடியும் என்ற மாயை தகர்த்தெறியப்பட்டுள்ளது.

எளிய மக்களுக்கும் விமானப் பயண வசதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது பிரதமரின் கனவாக இருந்தது என்பதில் எந்த ரகசியமும் இல்லை. சாதாரண கட்சி நிர்வாகியாக இருந்த காலத்திலேயே, பிரபல ஓவியர் ஆர்.கே.லட்சுமணனால் தீட்டப்பட்ட, ஏர் இந்தியா நிறுவனத்தின் அடையாளச் சின்னமான மகாராஜா ஓவியத்தை மாற்ற முடியுமா? என, வாஜ்பாய் ஆட்சியில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு.ராஜீவ் பிரதாப் ரூடியிடம், பிரதமர் திரு.நரேந்திர மோடி கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால், பின்னாளில் என்ன நடந்தது? யாராலும் நினைத்துப்பார்க்க முடியாத வகையில், ஆர்.கே.லட்சுமணனின் சித்திரத்திற்கு அருகில் சாமான்ய குடிமகனையும் அழைத்துச்செல்லும் வகையில், ஏர் இந்தியா நிறுவனத்தின் அடையாளச் சின்னம் மாற்றப்பட்டது. மத்தியில் திரு.நரேந்திரமோடி பிரதமராகப் பதவியேற்றதிலிருந்து இரண்டு ஆண்டுகளில், 2016-ஆம் ஆண்டு, மத்திய அரசால் புதிய விமானப் போக்குவரத்துக் கொள்கை அறிவிக்கப்பட்டபோது, முதலில், மண்டல அளவில் விமானப் போக்குவரத்தை ஏற்படுத்தி, எளிய குடிமகனையும் விமானத்தில் பயணம் செய்ய வைப்பது பற்றித்தான் பேசப்பட்டது. மண்டல இணைப்புக்கான உடான் திட்டத்தின் கீழ், முதல் விமானம், 2017 ஏப்ரலில், சிம்லாவில் இருந்து புதுதில்லிக்குப் பிரதமரால் தொடங்கிவைக்கப்பட்டது.

## திட்டத்தைப் பற்றி

உடான் திட்டத்தின் கீழ், உலக அளவில் 2-ஆம் நிலை மற்றும் 3-ஆம் நிலை நகரங்களை, பெருநகரங்களுடன் இணைக்கும் விதமாக, விமானப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திய மூன்றாவது பெரிய விமானப்

## பன்மடங்கு பலன்கள்

இதற்கு முன் இல்லாத வகையில், சாமானிய இந்தியக் குடிமக்களும் விமானப் பயணம் செய்ய முடிவதோடு, துடிப்புமிக்க இளைஞர்களின் எதிர்பார்ப்புகளைப் நிறைவு செய்யும் வகையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், சுற்றுலாவை மேம்படுத்துவதிலும், உடான் திட்டம் பெரும் பங்கு வகிக்கிறது.



**வேலைவாய்ப்பு :**
எழுதப்படாத விதிமுறையாக, ஒவ்வொரு விமானம் வானில் பறக்கும்போதும், விமானத்திற்குள்ளும், விமான நிலையங்கள், பழுதுபார்ப்பு, வான் போக்குவரத்து மேலாண்மை, பயணிகளின் உடமைகளை எடுத்துச் செல்லுதல், விமானங்கள் தரையிறங்குவதற்கான சேவைகளில், விமான நிறுவனங்களால், குறைந்தது 100 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க முடியும்.
உடான் திட்டத்தின் கீழ் அதிகப் பயன்பெறும் விதமாக, சுற்றுலாவை ஊக்குவிக்க 46 வழித்தடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ள 23 வழித்தடங்களில் ஏற்கனவே, நேரடி விமானப் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**சுற்றுலா :**
புத்தமத வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ள ஆக்ரா, ஜெய்ப்பூர், உதய்பூர், வாரணாசி, ராஜமுந்திரி, கோவா, வித்யாநகர், கௌசார் போன்ற இடங்களுக்கு விமானப் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. அகர்தலா-அய்ஸ்வால், ஷில்லாங் - கொல்கத்தா, குவஹாத்தி-பாக்யாங், திமாபூர்-இம்பால் போன்ற வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படுவதன் மூலம், வடகிழக்கு மாநிலங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களும் மேம்பாடு அடையும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அகமதாபாத்தில், சபர்மதி ஆற்றங்கரையிலும், உத்தராகண்டில் தேரி அணை அருகேயும், தெலங்கானாவில் நாகார்ஜுன சாகர் நீர்த்தேக்கம் போன்ற இடங்களிலும், விமான நிலையங்களை அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. சர்தார் சரோவர் அணை அருகே அமைந்துள்ள பிரசித்திபெற்ற ஒற்றுமைச் சிலையைக் காண விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்காக, இந்த மாத இறுதி வாக்கில், சிறியரக விமானச் சேவை தொடங்கப்பட உள்ளது.

**பொருளாதாரம் :**
விமானப் போக்குவரத்து வசதியை விரிவுபடுத்துவதன் மூலம், இந்தியாவில் உள்ள மேலும் பல இடங்களில், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழில் துறையினர், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க வாய்ப்பு ஏற்படுவதுடன், குறைந்த ஊதியத்தில் மனிதவளங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு, அன்மையில் நடத்திய ஒரு ஆய்வில், விமானப் போக்குவரத்து வசதிகள், பொருளாதாரத்தை 3.1 மடங்கு அதிகரிப்பதோடு, வேலைவாய்ப்புகளை ஆறு மடங்கு அதிகரிக்கவும் உதவுவது தெரியவந்துள்ளது. உதாரணமாக, கிஷான்கர் விமான நிலையத்திலிருந்து, தில்லி, அகமதாபாத், இந்தூர் மற்றும் ஹைதராபாத் நகரங்களுக்கு விமானங்கள் இயக்கப்படுவதால், பளிங்குக் கல் தொழிலில் அதிக லாபம் கிடைக்கத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக, அப்பகுதியில் உள்ள பளிங்குக் கல் விற்பனையாளர்களின் வருமானம், கடந்த சில ஆண்டுகளில் இருந்ததைவிட, மூன்று மடங்கு அதிகரித்திருப்பதாகக் கூறுகின்றனர்.

# வெற்றிப்பயணத்தின் வரலாறு

## கனவுத்திட்டத்தின் தொடக்கம்

- இத்திட்டத்தின்கீழ், உடான் 1, உடான் 2, உடான் 3 மற்றும் உடான் 4 என நான்கு சுற்றுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 70 விமான நிலையங்கள் தேர்வு செய்ப்பட்டுள்ளன. இதுவரை, 5 ஹெலிகாப்டர் இறங்கு தளங்கள் உட்பட, 50 விமான நிலையங்களிலிருந்து 281 வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படுகின்றன.

- முதல் மூன்று கட்டங்களில், 688 வழித்தடங்கள் தேர்வு செய்யப்பட்டன. முதல் கட்டத்தில் 56 வழித்தடங்களும், இரண்டாம் கட்டத்தில் 118 வழித்தடங்களும், மூன்றாம் கட்டத்தில் 100 வழித்தடங்களும் செயல்பாட்டிற்கு வந்துள்ளன. இதுவரை மொத்தம் 766 வழித்தடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- பெருந்தொற்று பாதிப்புக்கு இடையேயும், உடான் திட்டத்தின் நான்காம் கட்டமாக, 78 புதிய வழித்தடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு மாநிலங்கள், மலைப் பிரதேசங்கள், மற்றும் தீவுப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- புதிதாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வழித்தடங்களில், 29 விமான நிலையங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்த 8 விமான நிலையங்கள் ( 2 ஹெலிகாப்டர் இறங்கு தளங்கள் மற்றும் ஒரு நீர்நிலை விமான நிலையம் உட்பட) மற்றும் குறைவான போக்குவரத்து நடைபெற்று வந்த இரண்டு விமான நிலையங்களும் இதில் அடங்கும். உடான் நான்காம் கட்டத்தில், ஹெலிகாப்டர்களையும், நீர்ப்பரப்பிலிருந்தும் புறப்பட்டுச் செல்லக்கூடிய விமானங்களையும் இயக்குவதும் சேர்க்கப்பட்டுள்ளன.

## எதிர்நோக்கும் சவால்கள்

- இதுவரை 48 லட்சம் மக்கள் இத்திட்டத்தால் பலன் அடைந்துள்ளனர். பெருநகரம் அல்லாத விமான நிலையங்களில், உள்நாட்டுப் பயணிகள் போக்குவரத்து 5 சதவீதம் அதிகரித்துள்ளது.

- உடான் திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளில், 1,000 வழித்தடங்களுக்கு அனுமதி வழங்கி, விமானங்களை இயக்கவும், 100 விமான நிலையங்களை மேம்படுத்தவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 30 ஹெலிகாப்டர் தளங்களும், நீர்ப்பரப்பிலும் இயங்கக்கூடிய விமானங்களை இயக்க 10 நீர்நிலை விமான நிலையங்களும் இதில் அடங்கும்.

- குறைந்த கட்டணத்தில் ஆண்டுக்கு 10 கோடி பேர் பயணம் செய்ய வைப்பதே இலக்காகும்.

- அனைத்து மாநிலங்களையும், யூனியன் பிரதேசங்களையும் இணைப்பது.

- வேளாண் விளைபொருள்களை எடுத்துச் செல்வதற்காக கிரிஷி உடான் திட்டத்தைத் தொடங்குவது.

- புதிதாக 650 ஜோடி-க்கும் மேற்பட்ட நகரங்களில் விமானப் போக்குவரத்து தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், 200 நகரங்கள் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன.

- வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் வடகிழக்கு என நாட்டின் ஐந்து புவியியல் பகுதிகளிலும், சமச்சீரான இணைப்பை ஏற்படுத்துவது.







“நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து 2014 வரையிலான 67 ஆண்டுகளில், ஆண்டுக்கு ஒரு விமான நிலையம் என்ற அளவில், இந்தியாவில் 65 விமான நிலையங்கள் மட்டுமே இருந்தன. இது தான் அவர்களது வேகம் மற்றும் தொலைநோக்காக இருந்தது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், ஆண்டுக்கு ஒன்பது விமான நிலையங்கள் வீதம் 36 விமான நிலையங்கள் உருவாக்கப்பட்டு விமானங்களை இயக்கத் தயாராக உள்ளது. இது முன்பிருந்ததைவிட ஒன்பது மடங்கு வேகத்தில் மேற்கொள்ளப்பட்டது. அவர்களாக இருந்தால், இந்த இலக்கை அடைய 40 ஆண்டுகள் ஆகியிருக்கும்”.

பிரதமர் திரு.நரேந்திர மோடி (சிக்கிமில் உள்ள பாக்யாங் விமானநிலையத் தொடக்க விழாவில் பேசியது)

போக்குவரத்துச் சந்தையாக இந்தியா திகழ்கிறது. மண்டல விமானப் போக்குவரத்துத் திட்டத்தின் மூலம், மாநிலத் தலைநகரங்களுக்கு அப்பால் உள்ள முக்கிய நகரங்களுக்கும், மாநகரங்களுக்கும் விமானப் போக்குவரத்து தொடங்க முன்வருவோர் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறிய நகரங்களுக்கு விமானச் சேவையை வழங்க முன்வரும் நிறுவனங்களுக்கு முதலில் கடனுதவி மற்றும் பல்வேறு நிதிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

## விமான நிறுவனங்களுக்கு ஆதரவு

அனுமதிக்கப்பட்ட எந்தவொரு வழித்தடத்திலும் விமானங்களை இயக்க, ஒப்பந்தப் போட்டிகள் மூலம், விமான நிறுவனங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. ஒரு மணி நேர விமானப் பயணத்திற்கு, ரூ.2,500 கட்டணத்தில் பயணம் செய்வோருக்கு 50 சதவீத இருக்கைகளையாவது ஒதுக்க வேண்டும் என்பது தான், இதற்கு ஒரே நிபந்தனையாக விதிக்கப்படுகிறது. ஒரு விமானத்திற்கு 9 முதல் 40 இருக்கைகள் வரை இது போன்று ஒதுக்கீடு செய்யும் விமான நிறுவனங்களுக்கு மானிய உதவி பெறத் தகுதியுடையவை ஆகும்.

இந்த விமானங்களில் பயணம் செய்ய அதிகபட்சக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், மண்டல வழித்தடங்களில் விமானங்களை இயக்கும் நிறுவனங்கள் வர்த்தக ரீதியாக லாபகரமாக இயங்க ஏதுவாக, மத்திய - மாநில அரசுகள் நிதியுதவி செய்வதை உறுதி செய்வதோடு, கட்டுப்படியாகக் கூடிய அளவிற்கு கட்டணத்தையும் உயர்த்திக்கொள்ளலாம்.

எரிபொருள் விலை, இதுவரை பயன்படுத்தாத விமான நிலையங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் சலுகைகள் வழங்கப்படுவதன் காரணமாக, பெரிய விமான நிறுவனங்களுக்கு ஊக்கம் கிடைப்பதோடு, மண்டல அளவிலான புதிய விமான நிறுவனங்கள் தொடங்கப்படுவதற்கும் வழிவகுத்துள்ளது.

விமான எரிபொருளுக்குக் கலால்வரி குறைக்கப்பட்டிருப்பதுடன், சேவை வரியிலும் சலுகை அளிக்கப்படுவதால், விமான நிறுவனங்கள் லாபகரமாக இயங்குவதற்கும் மண்டல அளவிலான போக்குவரத்து வழிவகுத்துள்ளது.

தங்களது பங்களிப்பாக, விமான எரிபொருள் மீதான மதிப்புக் கூட்டுவரியை ஒரு சதவீதம் அல்லது அதற்கும் குறைவாக விதிக்க மாநில அரசுகளும் ஒப்பந்தம் செய்திருப்பதோடு, பாதுகாப்பு மற்றும் தீயணைப்புச் சேவைகளை இலவசமாக வழங்குவதுடன், மின்சாரம், தண்ணீர் மற்றும் பிற வசதிகளையும், சலுகைக் கட்டணத்தில் வழங்கி வருகின்றன. விமான நிலைய நிர்வாகங்களும் தரையிறங்குதல், விமான நிறுத்துமிடம், விமான முனையப் பயன்பாட்டுக் கட்டணங்களில் பல்வேறு சலுவைகளை வழங்கி வருகின்றன. இந்தியாவின் பிராந்திய அளவிலான விமானப் போக்குவரத்து, நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு மாற்றமடைந்து வருவதுடன், விமான நிறுவனங்களும், இதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்த வளங்களைப் பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது.

பயணிகளின் கண்ணோட்டத்தில் அணுகினால், மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களுக்காக மத்திய அரசு மண்டல அளவிலான விமானப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தியுள்ளது. அனைத்திற்கும் மேலாக, புறநகர் மற்றும் பிராந்திய அளவிலான விமானப் போக்குவரத்திற்கு நல்ல வாய்ப்பு உள்ளது என்பது நிதர்சனம். ■

SCAN QR CODE FOR PM'S COMPLETE SPEECH ON LAUNCH OF UDAN SCHEME



# புல்வாமா

## இந்தியாவின் பென்சில் மாவட்டம்

*அரசின் பல்வேறு முன்முயற்சிகளைப் பயன்படுத்தி, புல்வாமா மாவட்டத்தின் ஊகூ (Oukhoo) கிராமம், நாட்டின் பென்சில் தேவையில் 90 சதவீத அளவிற்கு விநியோகம் செய்வதன் மூலம், இந்தியாவின் 'பென்சில் கிராமமாக' உருவெடுத்துள்ளது*



நீண்ட நெடுங்காலமாக, தீவிரவாதிகளின் பிடியில் சிக்கியிருந்த ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா மாவட்டம், 2019 பிப்ரவரி 14 அன்று நடத்தப்பட்ட தாக்குதலால் இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனினும், இந்த அவப்பெயரைப் போக்கி, 'புதிய இந்தியாவில்' இந்த மாவட்டம் உரிய இடத்தைப் பெற்றுள்ளது. அரசின் முன்முயற்சிகளின் பலனாக, இம்மாவட்டத்தில் உள்ள ஊகூ கிராமம், இந்தியாவின் 'பென்சில் கிராமமாக' உருவெடுத்துள்ளது. நாட்டின் பென்சில் உற்பத்திக்குத் தேவையான மரக்கூடுகளில் 90 சதவீதம் இக்கிராமத்தில் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. எஞ்சிய 10 சதவீத மரக்கூடுகள் மட்டுமே கேரளாவிலிருந்து வருகின்றன.

புல்வாமா மாவட்டத்தின் புன்செய் நிலங்களில் மட்டுமே வளர்க்கப்படும் பிரத்யேக போப்லார் மரங்களிலிருந்து, பென்சில் மரக்கூடுகள் தயாரிக்கும் ஏராளமான தொழில் நிறுவனங்கள், வீடுகளிலேயே செயல்பட்டு வருகின்றன. ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்குப் புதிய அடையாளத்தை ஏற்படுத்தியுள்ள ஊகூ கிராமம், பென்சில் உற்பத்தி மையமாகப் படிப்படியாக உருவெடுத்து வருகிறது. நீங்கள், ஒவ்வொருமுறை பென்சிலைப் பயன்படுத்தும் போதும், காஷ்மீரித் தொழிலாளியின் உழைப்பு உங்களுக்கு நினைவுக்கு வரும்.

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிவந்த அரசியல் சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்ட பிறகு, இந்த யூனியன் பிரதேசத்தை தேசிய நீரோட்டத்தில் கொண்டுவர, மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்ற ஏதுவாக, புல்வாமா மாவட்டத்தை தீவிரவாதிகளின் பிடியிலிருந்து மீட்டு, நாட்டின் பென்சில் மாவட்டம் என்ற புதிய அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் தயாரிக்கப்படும் பென்சிலுக்கான மரக்கூடுகளில் 90 சதவீதத்தை, ஊகூ கிராமம் பூர்த்தி செய்கிறது. தற்போது, பென்சில் கூடுகள் மட்டுமின்றி, முழு பென்சிலையும் இக்கிராமத்திலேயே உற்பத்தி செய்யும் விதமாக, சிறப்பு மண்டலமாக மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கிராமத்தில் வசிக்கும் 400-க்கும் மேற்பட்டோர் இத்தொழிலில் ஈடுபட்டு வருவதால், வேலைவாய்ப்புகள் அதிகளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு மட்டும், பென்சில் மரக்கூடுகள் உற்பத்தி மூலம், ரூ.107 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

பென்சில் மரக்கூடுகள் அனந்த்நாக் மாவட்டத்திலுள்ள சில கிராமங்களிலும் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், 'பென்சில் கிராமம்' என்ற பெயரைப் பெற்ற காரணத்தால் ஊகூ கிராமம் மானிய உதவி பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளதால், தொழிலை விரிவுபடுத்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

1960-ஆம் ஆண்டு முதல், பென்சில் மரக்கூடுகள் தயாரிப்பதற்கு செடார் (தியோடார்) மரக்கட்டைகள் பயன்படுத்தப்பட்டு வருவதால், செடார் மரக்காடுகளின் பரப்பளவு குறைந்து வந்தது. இதையடுத்து, போப்லார் வகை மரக்கூடுகளைப் பயன்படுத்த தொடங்கியதால், ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. இது தவிர, காஷ்மீரில் தயாரிக்கப்படும் கிரிக்கெட் மட்டைகளை விற்பனை செய்வதற்கும் ஒரு சந்தை தேவைப்படுகிறது. மத்திய அரசால் மேற்கொள்ளப்படும் பல்வேறு முன்முயற்சிகள், உள்ளூர் வளர்ச்சிக்கு உதவுவதுடன், ஜம்மு - காஷ்மீரில் மாறிவரும் சூழலில், தற்சார்பு இந்தியா இயக்கத்தைப் பிரபலப்படுத்துவதற்கும் உறுதுணை புரிந்துள்ளன. தற்போது, நாட்டில் உள்ள ஒவ்வொருவரின் கையிலும் பயன்படுத்தப்படும் பென்சில், புல்வாமாவில் தான் தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ■

# தகவல், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை இலவசமாக வழங்குவதன் மூலம் மக்களுக்கு அதிகாரமளித்தல்




*"டிடி இலவச டிஷ், குறைந்த கட்டணத்திலான ஊடகமாக, தொலைதூர, சிறுகிராமங்கள் மற்றும் எல்லைப் பகுதிகளில் தரமான தகவல்களை அளித்து வருவதுடன், மக்களுக்கு, குறிப்பாக ஒடுக்கப்பட்ட, நலிந்த பிரிவு மக்களுக்கு அதிகாரமளிக்கும் கருவியாகவும், பொழுதுபோக்கு சாதனமாகவும் திகழ்கிறது"*

அடிப்படைத் தேவைகளுக்குப் பிறகு, தகவல் மற்றும் பொழுதுபோக்குச் சாதனங்கள், மக்களின் மிக முக்கியமான தேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆனால், தனியார் நிறுவனங்களின் டி.டி.எச். மற்றும் கேபிள் தொலைக்காட்சி சேவைகளுக்கான கட்டணம் அதிகமாக உள்ளதால், நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு இந்தச் சேவைகள் கிடைக்கப் பெறவில்லை. எனவே, தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், அவர்களுக்கு அதிகாரமளிக்கவும், ஒருமுறை மட்டும் ரூ.1,200 செலுத்துபவர்களுக்கு, டிடி இலவச டிஷ் வழங்கப்படுகிறது. நம்பகத்தன்மை எனும் ஊக்கத்தை அனுபவித்துவரும் தூர்தர்ஷனும், அகில இந்திய வானொலியும், செய்திகளை உடனுக்குடன் வழங்க வேண்டும் என்பதற்காக, செய்திகளின் தரத்தை ஒருபோதும் பாழ்படுத்தியதில்லை.

தூர்தர்ஷன், அகில இந்திய வானொலி ஆகியவை நம்பகத்தன்மை உடைய ஊடகங்கள் என்பதால், வதந்திகளையும் செய்தியாக ஒலிபரப்பும் மற்ற நிறுவனங்களைவிட இவை முன்னணியில் இருப்பதாக, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.பிரகாஷ் ஜவடேகர் கூறியிருக்கிறார். தூர்தர்ஷன் என்பது, நம்பகத்தன்மை மிக்க நிறுவனமாகத் திகழ்கிறது.

டிடி இலவச டிஷ் இலவச ஒலிபரப்புச் சேவைகளை வழங்குவதோடு, தனியார் டி.டி.எச். மற்றும் கேபிள் தொலைக்காட்சிகளுக்கு அதிக கட்டணம் செலுத்த முடியாத மக்களுக்கு ஒரு மாற்று வாய்ப்பாகவும் திகழ்கிறது. வசதிமிக்கவர்கள் அதிக கட்டணம் செலுத்திப் பெற்றுவரும் வெளியுலகைப் பற்றிய கருத்துக்கள் மற்றும் செய்திகளுடன், தரமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும், மாதாந்திர சந்தா ஏதுமின்றி மக்களுக்குக் கிடைப்பதற்கு டி.டி. இலவச டிஷ் உதவுகிறது.

இலவச சேவை வழங்குவதற்கான முடிவுக்கு 10-வது திட்ட காலத்திலேயே ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டம், பிரசார் பாரதி நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற தனியார் டி.டி.எச். சேவை வழங்குவோரைப் போன்று அல்லாமல், டி.டி. இலவச டிஷ் அலைவரிசைகளைக் காண்போரிடமிருந்து, பிரசார் பாரதி எவ்விதமான மாதாந்திர அல்லது வருடாந்திர சந்தாக்களை வசூலிப்பதில்லை.

முதலில், அரசு நிதிச்சேவைகள் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு, அடல் பிகாரி வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில், 2003ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவையின் ஒப்புதலும் பெறப்பட்டது. தூர்தர்ஷனின் 20 அலைவரிசைகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் 10 அலைவரிசைகள் உட்பட மொத்தம் 30 அலைவரிசைகளைக் கொண்ட கியூ-பேண்ட் விநியோகக் கட்டமைப்பு இலவசமாக வழங்கப்படுவதோடு, டி.டி. இலவச டி.டி.எச். தொகுப்பில் இடம்பெற்றுள்ள தனியார் நிறுவனங்களிடமிருந்து கேரேஜ் கட்டணத்தை வசூலிக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் பிரசார் பாரதி மேற்கொண்டு வருகிறது.

பின்னர், டிடி இலவச டி.டி.எச்.-சில் இடம்பெறும்



“டிடி இலவச டிஷ்” ஏழைகளுக்கும், நடுத்தர மக்களுக்கும் மோடி அரசு வழங்கும் அன்பளிப்பாகும். இதில், 104 அலைவரிசைகள் ஒலிபரப்பப்படுகின்றன. மின்னணு சாதனங்களை விற்பனை செய்யும் எந்தக் கடைக்கும் சென்று டிடி இலவச டிஷ்-ஷை வாங்கிக் கொள்ளலாம். ரூ.1,200 மட்டும் செலவுசெய்து, வாழ்நாள் முழுவதும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இலவசமாகக் காணலாம். தனியார் டி.டி.எச். சேவை வழங்குவோர் மாதாந்திர சந்தா வசூல் செய்கின்றனர். ஜீ, ஸ்டார், சோனி, கலர்ஸ் மற்றும் பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகள் இலவச டிஷ்-ஷில் கிடைக்கின்றன. இதில், செய்தி, விளையாட்டு மற்றும் கல்வி சார்ந்த 34 அலைவரிசைகளையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உடனடியாகச் சென்று இலவச டிஷ் பெற்று, அதனை இன்றே நிறுவுங்கள்”

**பிரகாஷ் ஜவடேகர்,**
மத்திய தகவல் - ஒலிபரப்புத்துறை அமைச்சர்

தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கை, 2004-இல் 30-லிருந்து 40-ஆக அதிகரிக்கப்பட்டது. இதில் தூர்தர்ஷனின் 17 அலைவரிசைகளும், தனியார் நிறுவனங்களின் 23 வரிசைகளும் இடம்பெற்றுள்ளன. அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் இந்தச் சேவை விரிவுபடுத்தப்பட்டு, தற்போது 112 எஸ்.டி.தொலைக்காட்சி அலைவரிசைகளும் ( SDTV channels), 48 வானொலி அலைவரிசைகளும் இடம்பெற்றுள்ளன. டி.டி. இலவச டிஷ் தொகுப்பு, மாறுபட்ட மற்றும் செழுமையான வகைகளைக் கொண்டதாக உள்ளது.

## டிடி இலவச டிஷ் செட் டாப் பாக்ஸ்

டிடி இலவச டிஷ்-ஷுடன் பயன்படுத்துவதற்கான செட் டாப் பாக்ஸ்-களுக்கு தூர்தர்ஷன் அங்கீகார முறையை அறிமுகப்படுத்தியிருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட செட் டாப் பாக்ஸ்களைத் தயாரிக்க, 10 உற்பத்தியாளர்களையும் பட்டியலிட்டுள்ளது. இதன் மூலம், நேயர்களுக்கு மேம்பட்ட நிகழ்ச்சிகளைக் காணும் அனுபவம் கிடைக்கும். தற்போது, பெரும்பாலான செட் டாப் பாக்ஸ்-கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனினும், இந்தியாவிலேயே செட் டாப் பாக்ஸ் உற்பத்தியை ஊக்குவிக்க, பிரதமர் திரு.நரேந்திர மோடியின் தொலைநோக்குத் திட்டங்களான ‘டிஜிட்டல் இந்தியா’ மற்றும் ‘இந்தியாவில் தயாரிப்போம்’ திட்டங்களின் கீழ், டி.டி. இலவச டிஷ் அமைப்பில், இந்தியாவின் கட்டுப்பாட்டுடன் கூடிய அணுகுதல்

## ஊரடங்கு காலத்தில் டிஜிட்டல் கற்றல்

SWAYAM PRABHA
Free DTH Channel for Education

- பொழுதுபோக்கு மற்றும் தகவல்களை வழங்குவதோடு, பெருந்தொற்று பாதிப்பு காரணமாக, பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மூடப்பட்டுள்ள நிலையில், மாணவர்களின் தடையற்ற கற்றலை உறுதி செய்யவும், இத்திட்டம் உதவுகிறது. 34 டிடிஎச் அலைவரிசைகளைக் கொண்ட தொகுப்பான ஸ்வயம் பிரபா, கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. நகர்ப்புறங்களில் வசிக்கும் மாணவர்கள் ஆன்லைன் வகுப்புகளில் பங்கேற்கும் சூழலில், தொலைதூர குக்கிராமங்களில் வசிக்கும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதை டிடி இலவச டிஷ் உறுதி செய்கிறது
- ஜி-சாட்-15 செயற்கைக்கோளைப் பயன்படுத்தி, ஸ்வயம் பிரபா அலைவரிசைகள், மாணவர்களுக்கு தரமிக்க கல்விச் சேவைகளை, வாரத்தின் ஏழு நாள்களிலும் 24 மணி நேரமும் தடையின்றி வழங்கி வருகின்றன. தினந்தோறும், குறைந்தது 4 மணி நேரத்திற்கு புதிய புதிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவதுடன், அவை மீண்டும் ஐந்து முறை மறுஒலிபரப்பு செய்யப்படுவதால், மாணவர்கள், தங்களுக்கு உகந்த நேரத்தைத் தேர்வுசெய்துகொள்ளவும் வாய்ப்பு கிடைக்கிறது.
- என்.பி.டி.இ.எல் (NPTEL), ஐ.ஐ.டி.க்கள் (IITs), யு.ஜி.சி (UGC), சி.இ.சி (CEC), இக்னோ (IGNOU), என்.சி.இ.ஆர்.டி (NCERT). என்.ஐ.ஓ.எஸ் (NIOS) ஆகியவை நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றன. இன்பிலிப்நெட் மையம், இணையதள அமைப்பை நிர்வகித்து வருகிறது.
- இதில், கலை, அறிவியல், வணிகம், மானுடவியல், பொறியியல், தொழில்நுட்பம், சட்டம், மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட முதுநிலைப் பட்ட மற்றும் இளநிலைப் பட்டப் படிப்புகளுக்கான பாடங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. அத்துடன், 11, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளையும் வழங்குவதோடு, பள்ளிக்கூடப் பாடங்களும் நடத்தப்படுகின்றன.




## பங்களாதேஷ், தென்கொரிய அலைவரிசைகளும் ஒலிபரப்பாகிறது

2019 ஜூன் முதல், பங்களாதேஷ் தொலைக்காட்சிக்குச் சொந்தமான பிடிவி வேர்ல்டு, டிடி இலவச டிஷ் மூலம் ஒலிபரப்பாகிறது. பிடிவி வேர்ல்டு தொலைக்காட்சி, இந்தியாவின் கிழக்குப் பகுதி நேயர்களால் விரும்பிப் பார்க்கப்படுகிறது. தென்கொரியா அரசின் 24 ஜ் 7 ஆங்கில மொழி தொலைக்காட்சியான கேபிஎஸ் வேர்ல்டு-ம் டிடி இலவச டிஷ் மூலம் கிடைக்கிறது.

நடைமுறைகளை உருவாக்க ஏதுவாக, மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையின் முன்முயற்சிக்கேற்ப, இந்தியக் கட்டுப்பாட்டுடன் கூடிய அணுகுதல் நடைமுறையை பிரசார் பாரதி நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்திட்டம், நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றடைய ஏதுவாக, டிடி இலவச டிஷ்-ஷுக்கான செட் டாப் பாக்ஸ்கள் , தொலைதூரப் பகுதிகள், மலைப் பிரதேசங்கள் மற்றும் இடதுசாரி (நக்சல்) தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு மட்டும், மத்திய அரசு, ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கில் 30,000 டிடி இலவச டிஷ் செட் டாப் பாக்ஸ்-களை வழங்கியுள்ளது. இந்த ஆண்டும், தொலைதூர மற்றும் இடதுசாரித் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1,20,000 செட் டாப் பாக்ஸ்-களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஏராளமான அலைவரிசைகள் வழங்கப்படுகின்றன

தற்போது பயன்பாட்டில் உள்ள டிடி இலவச டிஷ்-ஷில் தூர்தர்ஷனின் 38 அலைவரிசைகள், 2 நாடாளுமன்ற அலைவரிசைகள், 2 வெளிநாட்டுப் பொதுச் சேவை ஒலிபரப்பு நிறுவனங்களின் அலைவரிசைகள் மற்றும் 67 தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள், ஜிஇசி, திரைப்படங்கள், செய்தி, விளையாட்டு, பக்தி மற்றும் இலவச அலைவரிசைகள் என பல்வேறு பிரிவுகளில் வழங்கப்படுகின்றன. 2019-இல் 11 மாநில தூர்தர்ஷன் அலைவரிசைகள், டிடி இலவச டிஷ் மூலம், செயற்கைக் கோள் வழியாக வழங்கப்பட்டன. சட்டிஸ்கர், கோவா, ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், ஜார்க்கண்ட், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, திரிபுரா மற்றும் உத்தராகண்ட் ஆகிய மாநிலங்கள், முதன்முறையாக, தங்களுக்கென பிரத்யேக தூர்தர்ஷன் அலைவரிசைகளை, டிடி இலவச டிஷ் மூலமாக, செயற்கைக் கோள் வழியாகப் பெற்றன.

### சிறிய அளவிலான ஒருமுறை முதலீடு தேவை

டிடி இலவச டிஷ் சேவைகளைப் பெறுவதற்கு, செட் டாப் பாக்ஸ் மற்றும்சிறிய வடிவிலான டிஷ் ஆன்டெனா வாங்குவதற்கு, ஒரு முறை மட்டும் சிறிய அளவு முதலீடு செய்தால், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, வாழ்நாள் முழுவதும் இலவசமாகக் காண முடியும். பிரத்யேகமான டிடி இலவச டிஷ், நாட்டின் மிகப்பெரிய டிடிஎச் சேவை வழங்கும் அமைப்பாகத் திகழ்கிறது. நாடு முழுவதும் 3.8 கோடி வீடுகளில் டிடி இலவச டிஷ் பயன்படுத்தப்படுகிறது.

### அனைத்து தொலைதூரப் பகுதிகளிலும் தொலைக்காட்சி சேவை கிடைக்கச் செய்தல்

தொலைதூரப் பகுதிகள், எளிதில் அணுக முடியாத பகுதிகள், மற்றும் எல்லைப்புறங்களில் வசிக்கும் பல லட்சக்கணக்கான ஏழை மக்களைச் சென்றடைந்திருப்பதன் மூலம், சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட, நலிந்த பிரிவு மக்களுக்கு அதிகாரமளிக்கும் சாதனமாகத் திகழும் டிடி இலவச டிஷ், தரமான தகவல்களை வழங்கும், குறைந்த செலவிலான ஊடகமாகத் திகழ்கிறது. ■




# இந்தியாவில் புதிதாகப் பதிவாகும் கொரோனா பாதிப்புகளை விட குணமடைவோர் எண்ணிக்கைஅதிகரிப்பு

## கொரோனாவை சிறப்பாகக் கையாண்டுவரும் இந்தியா

கொரோனாவுக்கு எதிராக உறுதியான தீர்மானத்துடன் இந்தியா போராடி வருகிறது. உரிய நேரத்தில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை, "பரிசோதனை, கண்காணிப்பு மற்றும் சிகிச்சை" என்ற பிரதமர் நரேந்திர மோடியின் மந்திரம் ஆகியவை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைவோர் விகிதத்தில் உலகின் முதல் 10 நாடுகளில் ஒன்றாக இந்தியாவைக் கொண்டுவந்துள்ளது. உலக அளவில் இந்தியாவில் தான் அதிக எண்ணிக்கையிலானோர் குணமடைந்துள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராக ஒட்டுமொத்த உலகமும் போராடி வருகிறது. இரண்டு விதமான அறிக்கைகள் நம்மை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளன. முதலில், அக்டோபர் 4-ஆம் தேதி நிலவரப்படி, கொரோனாவிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 55 லட்சத்தைக் கடந்துள்ளது. இது உலகிலேயே அதிக எண்ணிக்கை ஆகும். இரண்டாவதாக, செப்டம்பர் 20 முதல் அக்டோபர் 4 வரை, தினசரி குணமடைவோர் எண்ணிக்கை, புதிதாகப் பதிவாகும் நோயாளிகளின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தது. தொடர்ந்து 14 நாட்களுக்குப் புதிதாக பதிவாகும் எண்ணிக்கையைவிட, குணமடைவோர் அளவு அதிகமாக இருந்தால், அந்த நாட்டில் கொரோனா உச்சகட்டத்தை அடைந்ததாக உலக சுகாதார அமைப்பு கருதுகிறது.


இந்தியாவில் குணமடைவோர் விகிதம் 84.34 சதவீதமாக உள்ளது. இது உலகிலேயே அதிகபட்சமாகும். இதனை எளிதாகக் கூற வேண்டும் என்றால், 100 நோயாளிகளில் 84 பேர் குணமடைந்துள்ளனர். இந்தியாவில் இதுவரை 66,23,515 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் 55,85,645 பேர் குணமடைந்துள்ளனர். கொரோனா தொற்றுக்கு இதுவரை 1,02,723 பேர் உயிரிழந்தனர். உயிரிழப்பு விகிதம் 1.55 சதவீதமாக உள்ளது. 70 சதவீதம் அளவுக்குக் குணமடைவோர் விகிதத்தைக் கொண்ட மாநிலங்களாக மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், தில்லி, ஒடிசா, கேரளா, மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம் ஆகியவை உள்ளன. இந்தப் பட்டியலில் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது. ■



“ எனதருமை நாட்டு மக்களே!

இந்த கொரோனா காலகட்டத்தில், எப்போதும் முகக்கவசம் அணியுங்கள், முகக்கவசம் அணியாமல் வெளியில் செல்ல வேண்டாம் என்று உங்களுக்கு நான் மீண்டும் ஒரு முறை அறிவுறுத்துகிறேன். "ஆறுஅடி இடைவெளி" எனும் தனி நபர் இடைவெளியே உங்களையும், உங்களது குடும்பத்தினரையும் பாதுகாக்கும். கொரோனாவுக்கு எதிரான நமது போராட்டத்தில் இந்தப் புதிய விதிகளே ஆயுதங்கள். இவையே ஒவ்வொரு குடிமகனின் உயிரையும் பாதுகாக்கும் பலம்வாய்ந்த ஆதாரமாக உள்ளன. மேலும், ஏதாவது தடுப்பு மருந்து கிடைக்கும் வரை, நமது முயற்சிகளை விட்டுவிடக் கூடாது என்பதை மறந்துவிடாதீர்கள்.

**- பிரதமர் நரேந்திர மோடி** ”



| இதுவரை பரிசோதிக்கப்பட்ட ஒட்டுமொத்த மாதிரிகள் | அக்டோபர் 4-இல் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகள் |
|---|---|
| 7,99,82,394 | 9,89,860 |

| Date | Active Cases |
|---|---|
| 19 September | 10.10 Lakh |
| 20 September | 10.04 Lakh |
| 21 September | 9.75 Lakh |
| 22 September | 9.68 Lakh |
| 23 September | 9.66 Lakh |
| 24 September | 9.69 Lakh |
| 25 September | 9.61 Lakh |
| 26 September | 9.56 Lakh |
| 27 September | 9.63 Lakh |
| 28 September | 9.47 Lakh |
| 29 September | 9.40 Lakh |
| 30 September | 9.40 Lakh |
| 1 October | 9.42 Lakh |
| 2 October | 9.45 Lakh |
| 3 October | 9.37 Lakh |
| 4 October | 9.35 Lakh |

Source:covid19india.org/

**84.34**
இந்தியாவில் குணமடைந்தோர் விகிதம் 84.34 சதவீதம்

**1.55**
இந்தியாவில் உயிரிழந்தோர் விகிதம் 1.55 சதவீதம்

# “ஐநா-வில் சீர்திருத்தம் தற்போதைய தேவை”

*செப்டம்பர் மாதத்தில் 75-வது ஆண்டை அடைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பானது, புதிய உலகின் சூழலுக்கு ஏற்பத் தன்னைத் தானே மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. தனது இருப்பை அதனால் நியாயப்படுத்த முடியவில்லை*



ஐக்கிய நாடுகள் அமைப்பு, அதன் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் உள்ள நிலையில், ஐநா-வில் சீர்திருத்தப்பட்ட பல்முனை அமைப்பு என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது. ஐநா-வின் 75-வது ஆண்டையொட்டி பேசிய பிரதமர் நரேந்திர மோடி, பொருத்தமான கேள்விகளை எழுப்பியதுடன், அதனைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் பரிந்துரைத்தார்.

ஐநா அமைப்பு, தனது பங்குக்கு சில பணிகளை மேற்கொண்டுள்ள போதிலும், உலகச் சமூகம் இன்று எதிர்கொண்டுவரும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், விவகாரங்களுக்கும் தீர்வுகாணும் வகையில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. கொரோனா தொற்று, உலகம் முழுவதும் பரவிவரும் நிலையில், பரஸ்பரம் மரியாதை அளிக்கும் நாடுகள் வெறும் பார்வையாளர்களாக உள்ளன. ஐநா அமைப்பில் அவசரமான, முழுமையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை கொரோனா தொற்று எடுத்துரைத்துள்ளது.

பிரதமர் தனது உரையில், “ஐநா-வின் செயல்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் பதிலடி நடவடிக்கைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது தற்போதைய தேவையாக உள்ளது. சீர்திருத்தங்கள் முழுமை பெறுவதை இந்திய மக்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகள் உண்மையிலேயே நிறைவு பெறுமா? என மக்கள் கவலை கொண்டுள்ளனர்,” என்றார்.

மேலும் அவர், “தங்களது பகுதியில் நடைபெறும் மாற்றங்கள், உலகின் பெரும்பாலான பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு நாடு எத்தனைக் காலம் தான் காத்திருக்க வேண்டும்? இந்த 21-ஆம் நூற்றாண்டில் நமது நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்துக்கான தேவைகள் மற்றும் சவால்கள், கடந்த காலத்தை விட மிகவும் வேறுபட்டுள்ளன. 1945-ஆம் ஆண்டில் இருந்த சூழலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பின் தன்மை, இன்றைய காலத்துக்கும் பொருந்துமா?” என்று அடுக்கடுக்கான கேள்விகளை முன்வைத்தார்.

இத்தனை ஆண்டுகளில் மூன்றாவது உலகப் போரை உலகம் தவிர்த்துள்ளது. எனினும், போர்கள், உள்நாட்டுப் போர்கள், தீவிரவாதத் தாக்குதல்கள் ஆகியவை உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்படுகின்றன. இதனால், லட்சக்கணக்கானோர் அகதிகளாக மாறியுள்ளனர். ஐநா அமைப்பின் முயற்சிகள், இந்த நெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் இல்லை. கடந்த 8-9 மாதங்களாக

| இந்தியா: வளர்ச்சிக்கான புதிய மாதிரி | சர்வதேச அமைதிக்கான வாக்குறுதி |
|---|---|
| ● உலகப் பொருளாதாரத்தை பல மடங்கு உயர்த்தும் சக்தியாக சுயசார்பு இந்தியா திகழும்<br>● 40 கோடி மக்களை வங்கிக் கட்டமைப்புக்குள் கொண்டுவந்து, கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை இந்தியா மாற்றியமைத்துள்ளது<br>● 4-5 ஆண்டுகளில் 60 கோடிக்கும் மேற்பட்ட மக்களை திறந்தவெளியைக் கழிப்பிடமாகப் பயன்படுத்தும் நிலையிலிருந்து இந்தியா மீட்டுள்ளது<br>● 50 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு இலவச சுகாதாரச் சேவை வசதிகள் கிடைத்துள்ளன<br>● மின்னணு பரிவர்த்தனையில் முன்னணி வகிக்கும் நாடுகளில் ஒன்றாகத் திகழும் இந்தியா, மேம்பாடு மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது<br>● காசநோய் இல்லாத இந்தியாவை 2025-ஆம் ஆண்டுக்குள் ஏற்படுத்துவதற்காக மிகப்பெரிய பிரச்சாரத்தை இந்தியா மேற்கொண்டு வருகிறது<br>● கிராமப்புறங்களில் உள்ள 15 கோடி வீடுகளுக்குக் குழாய்வழியாக குடிநீர் விநியோகிக்கும் திட்டத்தை இந்தியா செயல்படுத்தி வருகிறது<br>● 6 லட்சம் கிராமங்களை அகண்ட அலைவரிசை கண்ணாடி இழை கம்பிவடம் மூலம் இணைக்கும் மிகப்பெரும் திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ளது<br>● பெண்களுக்கு சம்பளத்துடன் கூடிய 26 வார மகப்பேறு கால விடுப்பு வழங்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது | ● உலக நலனுக்காக ஐநா பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினர் என்ற அடிப்படையில், ஜனவரி 2021 முதல் இரண்டு ஆண்டு காலத்துக்கு இந்தியா முக்கியமான பங்கினை ஆற்ற உள்ளது<br>● சுமார் 50 அமைதிக்காப்பு நடவடிக்கைகளுக்குத் தனது வீரர்களை இந்தியா அனுப்பிவைத்துள்ளது<br>● இந்த அமைதிக்காப்புப் பணிகளின் போது உயிரிழந்த வீரர்களில், இந்தியாவைச் சேர்ந்தவர்களே அதிகம்<br>● அக்டோபர் 2-இல் சர்வதேச அகிம்சை தினம்; ஜூன் 21-இல் சர்வதேச யோகா தினம்<br>● இடர்பாடுகளை எதிர்கொள்ளும் கட்டமைப்புக்கான கூட்டணியும், சர்வதேச சூரியக் கூட்டமைப்பும் இந்தியாவின் முயற்சிகள்<br>● அண்டை நாடுகளே முதன்மையானவை என்பது முதற்கொண்டு கிழக்கு நோக்கிய கொள்கை வரையான இந்தியாவின் செயல்பாடுகள் மற்றும் இந்தோ பசிபிக் பிராந்தியத்துக்கான செயல்பாடுகள் ஆகியவை இந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைவரின் பாதுகாப்புக்கும், நலனுக்குமானவை. மனிதசமூகத்தின் நலனுக்காகவே இந்தியா எப்போதும் பணியாற்றி வருகிறது<br>● 150-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அத்தியாவசிய மருந்துகளை மருந்துத் தயாரிப்புத் தொழில் துறை அனுப்பிவைத்துள்ளது<br>● உலகில் அதிக அளவில் தடுப்பு மருந்து உற்பத்தி செய்யும் நாடு என்ற முறையில், கொரோனா பெருந்தொற்றை எதிர்கொள்வதில் அனைத்து மனிதசமூகத்துக்கும் உதவ தனது தடுப்பு மருந்து தயாரிப்பு மற்றும் விநியோகத் திறனை வழங்க இந்தியா முன்வந்துள்ளது<br>● வலுவாக இருக்கும்போது, உலகுக்கு எந்தவொரு நெருக்கடியையும் இந்தியா ஏற்படுத்தாது; பலவீனமாக இருக்கும்போது, உலகுக்கு சுமையாக இருக்காது |

**ஐநா பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினர்**

- ஐநா பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினராக எட்டாவது முறையாக, இரண்டு ஆண்டு காலத்துக்கு ஜூன் 17, 2020-இல் இந்தியா தேர்வுசெய்யப்பட்டது
- ஐநா பாதுகாப்பு சபையில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 5 பேர் நிரந்தர உறுப்பினர்கள், அதாவது, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகியவை நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ளன. 10 உறுப்பினர்கள் தற்காலிகமானவர்கள். தற்காலிக உறுப்பினர்களில் பாதி பேர் ஒவ்வொரு ஆண்டும் தலா இரண்டு ஆண்டு காலத்துக்குத் தேர்வுசெய்யப்படுகின்றனர்

கொரோனாவுக்கு எதிராக உலகம் போராடி வருகிறது. இந்தப் பெருந்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் ஐநா அமைப்பு எங்கு உள்ளது? இருந்தாலும், அனைவருமே ஒரு குடும்பம் என்ற நிலையான தத்துவத்தைப் பின்பற்றிவரும் இந்தியா, உலக சமூகத்துக்குக் கைகொடுத்து உதவி வருகிறது. 130 கோடி மக்கள்தொகையைக் கொண்ட உலகின் மிகப்பெரும் ஜனநாயகம், அதாவது, உலக மக்கள் தொகையில் 18 சதவீதத்துக்கும் அதிகமாக கொண்டுள்ள நாடு, ஐநா அமைப்பில் முடிவுகளை மேற்கொள்ளும் அதிகாரத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளது.

"ஐநா அமைப்பில் இன்று இந்தியாவின் பங்களிப்பைப் பார்க்கும் ஒவ்வொரு இந்தியரும், ஐநா அமைப்பில் இந்தியாவின் விரிவான பங்களிப்பை எதிர்பார்த்துள்ளனர்," என்றார். மேலும் அவர், "75வது ஆண்டை கொண்டாடும் இந்தத் தருணத்தில், இந்த மாபெரும் அமைப்பின் முக்கியத்துவத்தைப் பேணிக் காக்க ஐநா அமைப்பும், அதன் உறுப்பு நாடுகளும் வலுவான உறுதியுடன் செயல்படும் என்று நான் நம்புகிறேன்," என்று பிரதமர் பேசும் போது கூறினார். ■

SCAN QR CODE FOR PM'S COMPLETE SPEECH AT UNGA



எப்போதும் பாதுகாப்பாக இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசு எங்களுக்கு தெரிவித்துள்ளது. நாங்கள் பயிற்சியைத் தொடங்கியுள்ளோம். இது தற்போது சிறப்பாக நடைபெறுகிறது. இருந்தாலும், போட்டித் தொடர்களும், விளையாட்டு நடவடிக்கைகளும் நடைபெறவில்லை

●பி.வி.சிந்து

# நேர்மறை எண்ணங்கள், பொறுமை மற்றும் நம்பிக்கையுடன் நாம் இருக்க வேண்டியது அவசியம்

கொரோனா பெருந்தொற்று, அனைத்தையும் நிலைகுலையச் செய்துள்ளது. ஒவ்வொருவரும் வீட்டிலேயே இருக்கக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்; போட்டித் தொடர்கள் ரத்துசெய்யப்பட்டுள்ளன. ஒலிம்பிக் உள்ளிட்டவை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. ஆனாலும், உயிர்தான் முதன்மையானது. பாதுகாப்பாக இருப்பதற்காக வீடுகளிலேயே இருக்கிறோம்! எனது பயிற்சிகளைக் கூட, வீட்டிலேயே செய்கிறேன். ஏனெனில், கொரோனா வைரஸ் எங்கு வேண்டுமானாலும் இருக்கும், அது வேகமாகப் பரவுகிறது. இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகின் எந்தப் பகுதிக்கும் பயணம் மேற்கொள்வது பாதுகாப்பானதாக இல்லை. விளையாட்டு வீராங்கனை என்ற முறையில், நேர்மறை எண்ணத்துடனும், பொறுமையாகவும், அனைத்தும் விரைவில் சீராகிவிடும் என்ற நம்பிக்கையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

கொரோனாவை எதிர்கொள்ள எண்ணற்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த அளவுக்கு ஆதரவாக இருப்பதற்காக அரசுக்கு நான் உண்மையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒலிம்பிக் போட்டிகளை அடுத்த ஆண்டில் நடத்த முடிவுசெய்யப்பட்டது முதலே, அதில் பங்கேற்க வாய்ப்பு உள்ளவர்கள் மட்டுமே பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

எப்போதும் பாதுகாப்பாக இருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசு எங்களுக்கு எடுத்துரைத்துள்ளது. நாங்கள் பயிற்சியைத் தொடங்கி, தற்போது சிறப்பாகச் சென்றுகொண்டிருக்கிறது. இருந்தாலும், போட்டிகளோ, விளையாட்டு நடவடிக்கைகளோ நடைபெறவில்லை. அரசு எப்போதுமே வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. ஏராளமான விளையாட்டு வீரர்கள், மனஅழுத்தத்துக்கு உள்ளாகியிருப்பார்கள். மற்ற பலரும், அடுத்து என்ன நடைபெறப் போகிறது என்பது குறித்து சிந்திக்கலாம். இந்தப் பிரச்சினை என்பது எந்தவொரு தனிநபர் மட்டும் எதிர்கொள்வது இல்லை, இது உலகப் பிரச்சினை என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கொரோனா பெருந்தொற்றால், விளையாட்டு வீரர்களின் வருமானம் பாதிக்கப்பட்டிருந்தாலும், சூழ்நிலை விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

விளையாட்டு வீராங்கனை என்ற முறையில், நாட்டில் கொரோனா தாக்குவதற்கு முன்னதாக பயிற்சி மேற்கொள்வதிலும், பயணம் மேற்கொள்வதிலும் தீவிரமாக இருந்தோம். நானும் கூட போட்டிகளில் கலந்துகொள்வதற்காக பல்வேறு இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தேன். ஆனால், தற்போது கடந்த 4-5 மாதங்களுக்கும் மேலாக நாம் அனைவரும் நமது வீடுகளிலேயே இருக்கிறோம். நாம் எப்போதும் பணியில் இருக்க வேண்டியது அவசியம். எனவே, ஏதாவது ஒன்றைச் செய்துகொண்டு பணியில் இருக்க வேண்டும் என்று தடகள வீரர்களையும், விளையாட்டு வீரர்களையும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்மால் வெளியே சென்று விளையாட முடியாமல் இருக்கலாம். ஆனால், விளையாட்டுக்கான பயிற்சியும், உடற்பயிற்சியும் மிகவும் முக்கியமானவை.

நிலைமை சீரடைந்த பிறகும் கூட, நாம் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம். பாதுகாப்பு நடவடிக்கைகளை விட்டுவிடக் கூடாது. நாம் எப்போதுமே எச்சரிக்கையுடன், தனி நபர் இடைவெளியைப் பின்பற்றுவதுடன் முகக்கவசம் மூலம் முகத்தை மறைத்துக் கொள்ளவும் வேண்டும். குறிப்பாக, போட்டிகளில் விளையாடச் செல்லும் போதும், பயணம் மேற்கொள்ளும்போதும் இதனைப் பின்பற்ற வேண்டும். தேவைப்படும் போதெல்லாம் கிருமிநாசினி கொண்டு கையை சுத்தப்படுத்த வேண்டும். தனி நபர் இடைவெளியைப் பின்பற்ற வேண்டும். போட்டிகளில் விளையாடும்போது, குறிப்பாக பேட்மிண்டன் போட்டியில் பங்கேற்கும் போது, கைகுலுக்குவதைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம். முகக்கவசம் பயன்படுத்துவதைக் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். வெளியிலிருந்து வீட்டுக்கு வந்ததும் குளிப்பதை ஒரு பழக்கமாக மாற்றிக் கொள்ள வேண்டும். மைதானத்துக்கு மிக விரைவில் நம்மால் திரும்ப முடியும் என்று எதிர்பார்க்கிறோம். எந்தவொரு பார்வையாளரும் இருக்க மாட்டார் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, பார்வையாளர் கூட்டம் இல்லாமல் விளையாடும் சூழலை நாம் கண்டிப்புடன் பயன்படுத்த வேண்டும். ■



# லடாக்கில் சுயசார்பு பழங்குடியின கிராமங்களுக்காக பனி ஸ்தூபிகள்

லடாக்கில் உள்ள பழங்குடியின கிராமங்களில் பின்பற்றப்படும் புத்தாக்க நீர் மேலாண்மை முறையானது, பாரம்பரிய வேளாண் மக்களை சுயசார்பு கொண்டதாக உயிர்ப்பிக்க உதவுகிறது. அதோடு,இளைஞர்கள் இடம்பெயர்வது தடுக்கப்படுகிறது.

லடாக்கின் குளுமையான பாலைவனம், உலகின் உயரமான பகுதியில், சராசரியாக 3,000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் உள்ள கிராமங்கள், ஓடைகளின் ஓரத்தில் தரிசு பாலைவனத்தில் சிறு சோலைகளாக விளங்குகின்றன. அல்லது வசந்த காலத்தில், கோடை காலத்தில் பனி உருகும் நீரைப் பயன்படுத்துகின்றனர்.

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக மழைப் பொழிவு படிப்படியாக குறைந்தது, சராசரி வெப்பநிலை அதிகரிப்பு, பனிப்பாறைகள் உருகுவது போன்றவற்றால் நீரின் அளவு பெருமளவு குறைந்துள்ளது. நீர்ப் பற்றாக்குறை காரணமாக, கிராமவாசிகள், தங்களது பாரம்பரிய வேளாண் நடைமுறைகளைக் கைவிட்டு, மற்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

தற்போது பனி ஸ்தூபிகள் என்ற புத்தாக்க முறையால், நீர்ப் பற்றாக்குறை மற்றும் அதனால் ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ‘‘பனி ஸ்தூபிகள் மூலம் கைவிடப்பட்ட கிராமங்கள் புனரமைப்பு’’ என்ற முக்கியமான நோக்கத்தின் கீழ், லடாக்கில் உள்ள மாற்றுமுறைக்கான இமயமலை கல்வி நிறுவனத்துடன் இணைந்து லடாக்கில் உள்ள பழங்குடியின சமூகத்தினர் குறித்து ஆய்வுசெய்வது, ஆவணமாக்குவது மற்றும் மேம்பாட்டுக்கான திட்டத்தை மத்திய பழங்குடியினர் நல விவகாரத் துறை அமைச்சகம், 2019-ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கியது.

2019-20 காலகட்டத்தில், லடாக்கில் உள்ள 26 இடங்களில் பனி ஸ்தூபிகளை உருவாக்குவதற்கு அமைச்சகம் ஆதரவு அளித்துள்ளது. இந்தத் திட்டத்தில், கிராம அளவிலான 250 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கும் மேலாக, இந்தத் திட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், லடாக் முழுவதும் பணிமனைகள் நடத்தப்பட்டன. பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதுடன், பயிரிடுதல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம், குளிர்காலத்தில் சுமார் 7.5 கோடி லிட்டர் நீர் சேமிக்கப்பட்டது. ‘‘லடாக்கின் முதலாவது பனிக்கட்டி ஏறும் திருவிழா’’ போன்ற சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு இல்லாத சுற்றுச்சூழல் நடவடிக்கைகளால், உள்ளூர் இளைஞர்களுக்கு சுற்றுச்சூழல் அடிப்படையிலான தொழில்முனைவோர் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த 2012-ஆம் ஆண்டில் பனிமலைகள் உருகியதால், குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு முற்றிலும் கைவிடப்பட்ட குலும் கிராமத்தில் இந்தத் திட்டம், 2019-ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கியது.

2020-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் மத்தியில், குலுமின் உயர் கிராமப் பகுதியில் 45 அடி உயர பனி ஸ்தூபி உருவானது. இதன் மூலம், 3 லட்சம் லிட்டர் நீர் சேமிக்கப்பட்டது. இந்த ஸ்தூபி, ஏப்ரல் மாதத்தில் முற்றிலும் உருகி, குலுமில் உள்ள விவசாய நிலங்களுக்குத் தேவையான நீர் கிடைத்தது.

அடுத்து வரவுள்ள குளிர்காலத்தில், லடாக் முழுவதும் 50 இடங்களில் பனி ஸ்தூபிகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரும் ஆண்டுகளில், நீர் வேளாண் உத்திகள் என்ற அளவிலிருந்து தனிப்பட்ட முறையிலான கிராம மறுவாழ்வுக்கான மாதிரியாக இந்தத் திட்டம் மாற்றம் பெறும். இந்தத் திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- பள்ளத்தாக்கின் மேல் பகுதியில் பயிரிடுதல் மூலம் கரிக்காற்று உறிஞ்சப்பட்டு, வெள்ளப் பெருக்கு ஏற்படுவது தடுக்கப்படும்.
- சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் ஹைட்ரோபோனிக் முறைகள் மட்டுமல்லாமல் இல்லாமல், நவீன தோட்டக்கலை மற்றும் நீர்ப்பாசன நடைமுறைகள்
- தினசரிப் பயன்பாட்டுக்காக, காற்று, சூரிய, உயிரிஎரிபொருள் போன்ற மாற்றுமுறைத் தொழில்நுட்பங்கள்.


‘‘இமயமலைப் பண்ணை நிலைகள்’’ முயற்சியின் மூலம், இந்த கிராமங்களிலிருந்து இளைஞர்கள் இடம்பெயர்வதைத் தடுக்கும் வகையில், வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பண்ணை வீடுகளில் சுற்றுலாப் பயணிகள் தங்க வைக்கப்படுவார்கள். அவர்களை கிராமத்தில் உள்ள வயதுமுதிர்ந்தவர்கள் கவனித்துக் கொள்வார்கள். ■



# கொரோனா காலத்தில் வாய்ப்புகள்

கொரோனாவை எதிர்கொள்ள மருத்துவ முகக்கவசங்களை ஐஐடி மும்பை உருவாக்கியுள்ளது; மாடித் தோட்டத்தின் மேற்கூரையாக மாறிய இயற்கையாக வளரும் தாவரங்கள்

## 6 மாதங்களுக்குப் பயன்படும் முகக்கவசம்



தற்போதைய சமயத்தில் முகக்கவசம் என்பது இன்றியமையாததாக மாறிவிட்டது. அதனை அடிக்கடி மாற்றுவது என்பது பணத்தையும், வளங்களையும் இழப்பதாக உள்ளது. இந்தச் சூழலில் அடிக்கடி மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாத முகக்கவசங்கள் பயன் அளிக்கக் கூடியவை. இந்தச் சவாலை எதிர்கொள்ளும் வகையில், பெண்களை சுயசார்பு கொண்டவர்களாக மாற்றும் திட்டத்தைச் செயல்படுத்திவரும் கிராமப்புற அமைப்பான ஜீவிகா டிடீஸுடன் இணைந்து மருத்துவ முகக்கவசத்தை ஐஐடி மும்பை உருவாக்கியுள்ளது. இதனை 6 மாதங்களுக்கு துவைக்காமலேயே பயன்படுத்த முடியும். இது தொடர்பாக வைஷாலி மற்றும் பாட்னா மாவட்டங்களில் உள்ள ஜீவிகா டிடீஸ் அமைப்பினருக்கு ஆன்லைன் மூலம் ஐஐடி மும்பையைச் சேர்ந்த வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். ஏற்கனவே 5 லட்சம் முகக்கவசங்கள் தயாரிக்கப்பட்டு, சுகாதாரத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை சந்தையில் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டப்பேரவைத் தேர்தல் காலத்தில், தேர்தல் ஆணையம் இதனைப் பயன்படுத்த உள்ளது. இது குறித்து ஜீவிகா டிடீஸ் அமைப்பினர் கூறும்போது, “ஐஐடி மும்பை வழங்கிய வைரசுக்கு எதிரான ரசாயனங்கள், வெதுவெதுப்பான நீரில் கலக்கப்பட்டு ஒரு கலவை (வஷீறீமீ கூஷீ வீஷீஸீ) உருவாக்கப்படுகிறது. இதில், முகக்கவசங்களை நனைத்து எடுக்கப்பட்டு உலர வைத்து, பின்னர் இவை பெட்டிகளில் அடைக்கப்படுகின்றன. துராபோட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, எளிமையான நனைக்கும் முறை மூலம், துணி நூல்களில் பாக்டீரியா மற்றும் வைரஸுக்கு எதிரான தன்மைகள் சேர்க்கப்படுகின்றன. ஜீவிகா டிடீஸ் அமைப்பினர், நாள்தோறும் 200 முதல் 600 முகக்கவசங்களை தயாரித்து, ரூ.1,000 வரை வருமானம் ஈட்டுகின்றனர். ■

## நகரமயமாக்கலுக்கு மத்தியில் பசுமை ஏற்படுத்துதல்



நவீன நகரங்களில் கான்கிரீட் கட்டுமானங்களுக்கு மத்தியில், பசுமைத் தோட்டங்களை அமைக்கும் கனவை யாராலும் நிறைவேற்ற முடியாது. எனினும், எங்கு தீர்மானம் இருக்கிறதோ, அங்கு செயல்படுத்துவதற்கான வழி உள்ளது என்று கூறுவார்கள். தில்லியைச் சேர்ந்த பதம் சிங் என்ற பசுமை மனிதர், இந்தக் கொரோனா காலத்தில் தனது மாடியை மேற்கூரைத் தோட்டமாக மாற்றியுள்ளார். 105 வகையான தாவரங்களை இவர் வளர்த்து வருகிறார். மாம்பழம், கொய்யா, எலுமிச்சை, திராட்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, கினு, மாதுளை போன்ற 35 வகையான பழங்களை விளைவிக்கிறார். பழங்களோடு, சுரைக்காய், பாகற்காய், கத்தரி, கீரை, வெந்தயம், மிளகாய், முள்ளங்கி போன்ற 15 வகையான காய்கறிகளையும் விளைவித்து, மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறார். இதுகுறித்து பதம் சிங் கூறும்போது, “பொதுமுடக்கக் காலத்தில் மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொண்டேன். புதிய செடிகளை வளர்த்ததோடு மட்டுமல்லாமல், பசுமையாக்கும் பணியில் ஈடுபடுமாறு மற்றவர்களையும் ஊக்குவித்தேன்,” என்று தெரிவித்தார். மக்களுக்கு அறிவுரைகளை வழங்கவும், தேவையான மக்களுக்குக் காய்கறிகளை வழங்கவும் வாட்ஸ்அப் குழுவை அவர் உருவாக்கினார். பொதுமுடக்கத்துக்குப் பிறகு, தோட்டங்களை அமைப்பது குறித்து அறிந்துகொள்ள அவரிடம் மக்கள் குவிந்தனர். தோட்டங்களை அமைப்பதை பொழுதுபோக்காக மக்கள் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக செடிகளை இலவசமாக வழங்கி வருகிறார் பதம் சிங். ■



**Narendra Modi** @narendramodi ·
நரேந்திர மோடி

ஐநா மீது 130 கோடி இந்தியர்களும் மிகுந்த மரியாதை வைத்துள்ளனர். அதேநேரம், ஐநா-வின் செயல்பாடுகள் முழுமையடையும் வகையிலான சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு அவர்கள் நீண்ட காலமாகக் காத்திருக்கின்றனர். ஐநா-வில் முடிவெடுக்கும் அதிகாரத்திலிருந்து இந்தியா போன்ற நாடுகள் எப்போது வரை விலக்கிவைக்கப்படும்



**Rajnath Singh** @rajnathsingh ·
ராஜ்நாத் சிங்

இந்த IDEX4Fauji முயற்சிகள், வீரர்களிடமிருந்து புத்தாக்கச் சிந்தனைகளைக் கொண்டுவரச் செய்யும். நமது ஆயுதப் படைகளின் எதிர்காலத்தைப் புரட்சிகரமாக்க உதவும்.
நமது சொந்தத் தேவைகள் குறித்து நமது வீரர்கள் தெரிந்துவைத்திருப்பதோடு, அவர்களுக்குப் புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் புதிய நிறுவனங்களிடமிருந்து போதிய ஆதரவு தேவை



**Amit Shah** @AmitShah ·
அமித் ஷா

பெண்கள் உரிமைகளுக்கான சாதனையாளர் ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் அவர்கள். விதவைகள் மறுமணச் சட்டத்திற்காகவும், அவர்களது மேம்பாட்டுக்காகவும் இடையறாது உழைத்தவர். வித்யாசாகர் அவர்களின் அழிவில்லாத உன்னதமான செயல்பாடுகள், உலகம் முழுவதும் லட்சக்கணக்கானோரை ஊக்குவிக்கும் சக்தியாகத் திகழும்.



**Office Of Nitin Gadkari** @Offic... ·
நிதின் கட்கரி

நேரிலும், மின்னணு முறையிலும் சான்றிதழ்களைக் காண்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. செல்லத்தக்க கால நீட்டிப்பு, ஆவணங்களை விநியோகிப்பது, ஆய்வுக்கான தேதி-நேரம் குறித்து முத்திரையிடுவது, அதிகாரிகளின் முத்திரை உள்ளிட்டவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது



**Dharmendra Pradhan** @dprad.....
தர்மேந்திர பிரதான்

எரிசக்தி ஒத்துழைப்பு மற்றும் நமது வெளியுறவுக் கொள்கையுடன் அதன் இணைப்பு, கடந்த 6 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட வலுவான எரிசக்திக் கொள்கைகள் ஆகியவை இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் முக்கியமான பலன்களை அளித்துள்ளன. ஹைட்ரோகார்பன்களைப் பெறுவதற்கான வழிகளை விரிவுபடுத்திய நிலையில், தற்போது 30-க்கும் மேற்பட்ட நாடுகளிடமிருந்து கச்சா எண்ணெய் பெற்று வருகிறோம்.




**Hardeep Singh Puri** @Hardee...
ஹர்தீப் சிங் பூரி

உயரமாகப் பறக்கிறோம்!
129வது நாளான செப்டம்பர் 29, 2020-இன் 23:59 வரையான காலத்தில் உள்நாட்டுச் சேவைகள்
புறப்பாடு - 1338
கையாளப்பட்டப் பயணிகள் - 1,18,861
வருகை - 1335
கையாளப்பட்டப் பயணிகள் - 1,18,771
ஒட்டுமொத்த விமானச் சேவைகள் - 2673
விமான நிலையங்களுக்கு வந்தவர்கள் - 2,37,632
ஒட்டுமொத்தப் பயணிகள் - 1,18,861

ADDRESS AT UNGA

# PM takes swipe at China, questions UN role in pandemic




Prime Minister Narendra Modi addresses the UNGA. UN

MANN KI BAAT

# With stories of innovation, PM stresses: farmers the heart of Atmanirbhar nation

EXPRESS NEWS SERVICE
NEW DELHI, SEPTEMBER 27



Farmers can sell 'anywhere and to anyone': PM

# Modi-Hasina virtu... meeting likely in D...

Indrani.Bagchi
@timesgroup.com



India and Bangladesh want start work on a comprehensive trading agreement

# The Modi I know

Once Vaghela had been eased out from the BJP, Modi ceased to be Keshubhai's favourite... Modi had outlived his utility for Patel. Keshubhai wasn't content with merely sidelining Modi, though; he had him transferred to Delhi as organizing General Secretary of the BJP. This was no ordinary political transfer. Keshubhai had enforced a stipulation... if ever Modi visited his home state, he would not meet any politician or journalist... would confine himself only to personal matters



SENIOR QUAD OFFICIALS MEET

# PM Modi speaks to Japan counterpart, focus on open and inclusive Indo-Pacific

SHUBHAJIT ROY
NEW DELHI, SEPTEMBER 25

VIRTUAL BILATERAL MEET WITH RAJAPAKSA

# High priority for Lanka ties, says PM as he flags fishermen, Tamil issues

SHUBHAJIT ROY
NEW DELHI, SEPTEMBER 26



PM Narendra Modi and his Sri Lanka counterpart Mahinda Rajapaksa during their virtual meeting on Saturday. PTI

PEN TO PAPER

- Island-wide engagement through High Impact Community Development Projects for 2020-25
- Construction of 10,000 housing units in plantation areas
- Solar projects under a $100-million line of credit from India
- Early establishment of an air bubble to resume travel
- Assistance of $15 million for promotion of Buddhist ties
- India to facilitate visit of Buddhist delegation from Sri Lanka...


EXPLAINED

## Eye on China, India engages Rajapaksas


# India inks 1st green pact with Denmark

TRIBUNE NEWS SERVICE

NEW DELHI, SEPTEMBER 28



The Covid-19 pandemic showed the risk involved in excessive dependence of the global supply chain on any single source. —Narendra Modi, PM



India & Denmark have agreed to collaborate in several sectors on basis of an action plan that will set targets for next few years. —Mette Frederiksen, Denmark PM



RNI No. :
DELTAM/2020/78809
October: 16-31, 2020

New India
SAMACHAR
Fortnightly

RNI Registered No. DELTAM/2020/78809, Delhi Postal License No DL (S)-1/3551/2020-22, WPP NO U (S)-99, posting at BPC, MEGHDOOT BHAWAN, NEW DELHI-110001 On 13-17 advance Fortnightly, (Publishing Date October 5, 2020, Pages-36)

# ஒரே பாரதம்
# உன்னத பாரதம்

“

கௌடில்யரின் நட்புறவு, மன்னர் சிவாஜியின் வீரம் ஆகியவை கலந்த கலவையாக சர்தார் படேல் திகழ்கிறார். மாகாணங்களை ஆண்ட குறுநில மன்னர்கள் மத்தியில் ஜூலை 5, 1947இல் உரையாற்றிய அவர் கூறும் போது, “வெளிநாட்டிலிருந்து ஊடுருவியவர்களிடம் நாம் தோல்வியடைந்ததற்கு உள்நாட்டுக் குழப்பங்களும், விரோதமுமே முக்கியமான காரணங்கள். தற்போது நாம் மீண்டும் அதே தவறுகளைச் செய்யவோ அல்லது யாருக்கோ நாம் மீண்டும் அடிமையாக இருக்கவோ கூடாது,” என்று தெரிவித்தார். சர்தார் அவர்களின் பேச்சைக் கேட்டு, ஒற்றுமையின் சக்தியை மாகாணங்கள் உணர்ந்தன. மாகாணங்கள் தங்களை இணைத்துக் கொண்டன. விரைவில் இந்தியா ஒன்றாக மாறியது.

- ஒற்றுமையின் சிலையை
திறந்துவைத்தபோது பிரதமர் நரேந்திர மோடி

Tamil Issue 8

Published & Printed by: Satyendra Prakash, DG, BOC on behalf of Bureau of Outreach and Communication

Editor: Kuldeep Singh Dhatwalia , PDG, PIB, New Delhi

Published from Bureau of Outreach and Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003

Printed at Infinity Advertising services Pvt Ltd. FBD-One Corporate Park, 10th floor, New Delhi-Faridabad border, NH-1, Faridabad-121003